287

.I. No. M. 2210 வருஷ சந்தா ரூ-1-8-0.

ஆசிரியர் : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# JAGANMOHINI

மலர் V. [இதழ் 4



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 APR 1928
MADRAS

தனிப் பிரதி அணா 3.

JL
3M211,N22 JM
N28.54.
182844

ஜகன்மோகினி ஆபீஸ்.
26, தோடித் தெரு, :: திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

ஐந்தாவது ஆண்டு. ஐந்தாவது ஆண்டு.

# ஜகன்மோகினி

இது ஒரு சிறந்த மாதாந்த நாவல் பத்திரிகை. இதன் 5-வது ஆண்டு 1927௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இவ்வாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட "ராதாமணி" என்னும் அருமையான துப்பறியும் நாவலும், ஹாஸ்யவினோதங்களும், வேறு சில விஷயங்களும், காவியங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச்சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் ரூபாய் 1—8—0.

# பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெருமையும், கதாநாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான செய்கைகளும், செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக்கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்ய ரஸப் பிரதானமான செய்கைகளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப்பென்பதே தாராமல் ஆநந்திக்கச்செய்யும். சித்திரப் படங்களுடன் கூடியது.

விலை ரூபாய் 2—8—0.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

உ
ஓம்

# ஜகன் மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

16 APR 1928
MADRAS

| | | |
|---|---|---|
| மலர் V | பிரபவஹு பங்குனிமீ<br>March 1928. | இதழ் 4 |

## கடவுள் வணக்கம்

### திருவல்லிக்கேணி பஞ்சரத்நம்

1. அண்டங்கள் முற்று முனைத் தண்டனிட்டுப் போற்றும்
அமலனே ஆயர் கோனே !
அஞ்சாது நெஞ்சுடைய வஞ்சியாம் பூதனையை
அலறிடச் செய்த கோனே !
எண்டிசையும் இடியோங்கி இருளுடன் பெய்த அவ்
விரவு மழை தடுத்த கோனே !
இன்பமுடன் தனைச்சார்ந்த கோபாலருக்கு முனம்
இருபாதம் தந்த கோனே !
மண்டலம் புகழ்வனிதை மன்னவர்ச்சபைதனில்
வருந்திடக் காத்தகோனே!
வறுமையால் துயருற்ற மாசருசுதாமனின்
மனமகிழச் செய்த கோனே!
தண்டுளவ ஹாரமோடுதே னஞ்சயன் தேரினில்
சாரத்யம் செய்த கோனே!
தங்குபுகழ் திருவல்லிக் கேணிதனில் மேவியருள்
சாரதீ சரணம் கோனே!

(தொடரும்)

வை. மு. கோ.

## அநுபவ நீதிசாரம்.

28. உனக்கு ஒருகாலத்தில் எவ்விதமான உதவி செய்த போதிலும் அம்மனிதரை நீ உனது கடவுளாகவும், குருவாகவும், பெற்றோராகவும் உன்னுடைய பூரண விச்வாசத்துடன் என்றும் நன்றி மறவாது இருப்பதே உனது கடமையும் க்ஷேம விருத்தியுமாகும்.

29. தான் படிப்பது தனக்கே விளங்க வில்லையாம். அக்கதையைப் பிறர் கேட்டுப் பலனை யடைந்து விட்டார்களாம்.

30. "ஐயோ பாவம்! பூர்ணகர்ப்பிணி கஷ்டப்பட்டுக் கலங்கழுவுகிறாயே?" என்று சொல்வதை விட்டுத்தான் அவ்வேலையைச் செய்ய முன்வருவாருண்டோ!

31. தன் வீட்டில் தினம் பகல் 1 மணிக்குத்தான் சோறு. பிறர் வீடு சென்றால் 10 மணிக்கே காதை யடைக்கின்றதாம்.

32. காப்பியைக் கண்டறியாதவர்கள் அன்னியர் வீட்டில் சென்றால் இரண்டாம் வேளை காப்பி இன்றி தலைவலி வந்து விட்டதென்று பாசாங்கு செய்வதும் வேடிக்கை யல்லவா!

---

## ஹாஸ்யத்துணுக்குகள்.

நஞ்சுண்டன்:— அப்பா! என் என்னுடைய உபாத்தியாயர் எப்பொழுதும் இரண்டு மார்க்கே போடுகிறார்?

தகப்பனார்:— அடே நஞ்சுண்டா! உனக்கு உபாத்தியாயர் எப்பொழுதும் இரண்டு மார்க்கே போடட்டும். ஏனென்றால் இரண்டு பிள்ளையார் சுழியைப் போல் இருப்பதல்லவா! ஆகையால் பிள்ளையார் சுழியினால் உபாத்தியாயர் உனக்கு அனுக்கிரஹம் செய்கிறார். பயப்படாதே!

வை. மு. ஸ்ரீனிவாசன்.

**திண்டன்:**—பொடி போடுவது கெட்ட பழக்கமென்று பெரியார் கூறக் கேட்டிருக்கிறேன். நேற்றிரவு கோயிலுக்குச் சென்றேன். அங்கு அம்மன் புறப்பாடாயிற்று. அப்போது அம்மனுக்கு முன்னால் நிறைந்த கும்பலில் சிலர் ஏதோ பாடிக் கொண்டே சென்றார்கள். அதில் "பொடி மூக்கும் காதிரண்டும்" என்று ராகமாகப் பாடினார்கள். அந்தப் பாட்டு என்னவென்று விசாரித்ததில் ஏதோ அழுவார் பாடிய சிறிய திருமொடலாம். அவர் பொடிப் பிரியர் போல விருக்கிறது. அவரே பாடியுள்ள போது இனி பொடி போட்டாலென்ன? பொடி போட்டுப் போட்டு இருகாது பரியந்தம் மூக்கு அகர்ந்துவிட்டதாம். அதனால் பொடி மூக்குங் காதிரண்டும் என்றார் போலும்.

**குண்டன்:**— அட அசடே! உன்னோடு நானுந்தானே வந்தேன். கொடிமூக்குங் காதிரண்டும் என்றல்லவா பாடினார்கள். பேஷ். வீணாக பெரியார் பாடல்களை யெல்லாம் பழித்துப் பாபத்தைச் சேர்க்காதே!

வை. மு. கோ.

182844

## எமது மனமார்ந்த நன்றியறிதல்

அன்பார்ந்த சகோதர சகோதரிகாள்!

காருண்ய மூர்த்தியின் கருணையினால் நடக்கும் இவ்வைந்தாவது ஆண்டிற்குச் சென்ற ஆண்டின் சந்தா நேயர்களில் பெரும்பாலோரும் புதிய நேயர்களும் சந்தா சேர்ந்து உதவியதற்கு எனது மனமார்ந்த நன்றியறிதலை இதன் வாயிலாக வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிற்க, நமது சந்தா நேயர்களில் சிலர், சில சந்தர்ப்பக் குறைவினால் நமது **சண்பக விஜயம்** புத்தகத்திற்கு சித்திரை, வைகாசி மாதத்தில் தான் பணமனுப்பக் கூடும்; ஆதலால் அதன் விலையை முன்போலவே தபால் கட்டணம் உள்பட ரூபா. 1—8—0 க்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். சிலர் எக்காரணத்தினாலோ இது பரியந்தம் வாங்காமையினாலும் எல்லாவற்றையும் யோசித்து நமது நேயர்களுக்கு இன்னும் இரண்டு மாதங்களுக்கு பழைய விலைப்படிக் கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றோம். நமது பத்ரிகையினதும் புத்தகத்தினதும் முன்னேற்றத்தைக் கோரும் நேயர்கள் அவைகளை அன்புடன் ஆதரித்து எம்மையும் ஊக்கி உற்சாக மளிக்கும்படியாய் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் சகோதரி,
**வை. மு. கோதை நாயகி.**

---

## பரிசுகளின் விவரம்.

மூன்றாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

**சந்தா நெம்பர்.**

558. Mr. S. Ramaswamy, Kulasekara patnam.

2430. Mr. T. G. Rajagopala Chettiar, Kumbakonam.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் இதே மாதிரி இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். பழைய சந்தாதாரர்கள் தங்களது சந்தா நம்பரை அவசியம் தெரிவிக்கக் கோருகிறோம்.

---

## அறிவிப்பு

கடந்த 2வது இதழில் வெளியான "ஜகன் மோகினி" பரிசு நெ. 5க்கு சரியான விடை = பாக்கு வெட்டி.

பரிசு பெற்றவர் =

**தி. மு. வீ. தியாகராஜ பிள்ளை அவர்கள்,**
சோணவத் தெருவு,
கொழும்பு

# ஒரு சம்பாஷணை

**கண்ணன் :—** அடே! என் கண்ணைப் பொத்துகின்றாய்? விடடா அசப்பில் இவ்விதம் செய்யாதே.

**ராமன் :—** விட்டு விடுகிறேன். நீ என்ன புத்தகம் படிக்கின்றாய்? சண்பகவிஜயமா! உன் படிப்பின் திறமையைப் பார்ப்போம். தற்போது எந்த பேரா வாசிக்கின்றாய்; அதை அப்படியே சொல்லு பார்ப்போம்.

**கண்ணன் :—** விட்டுவிடு சொல்லுகிறேன். சொல்வதென்ன அதிசயமோ! இதோ கேள்.

“அடேய் சண்டாளா! உன்னை இப்போதே நசுக்கிவிடுகிறேன். நீ இனி உயிர்தப்புவது எமன் கையினின்றும் தப்புவது போன்றுதான். ஹா! ஜனகிபாய் உன்னோடு கூடவா ரயிலில் வந்தாள்? ஐயோ! அவள் உன்னை யறியாமல் அழைத்து வந்தாள் போலும்” என்று கூறியவாறு ராஜன் தொண்டையை இன்னும் கெட்டியாக அழுத்தினான்...... ஆ! நாதா! நாதா! தாங்கள் இவ்விதமான காரியம் செய்யலாகுமா! ஐயோ! என்ன மதி மயங்கி விட்டீர்களா! ஐயோ! வேண்டாம்; வேண்டாம்; கொலை பாதகம் வேண்டாம். முன்பின்னறியாதவனான இந்த மனிதனைத் தாங்கள் என் கொலை செய்யவேண்டும்? இந்த மனிதர் யார்? உங்களுக்கு இவரிடம் யாது பகைமை? நாதா! நாதா! விட்டுவிடுங்கள்; விட்டுவிடுங்கள். கொலைசெய்யவேண்டாம்” என்று தடுத்தாள்......உன்னை யார் இங்கு அழைத்தது? சீச்சீ! வெளியே போ! இல்லையேல் உன்னையும் தொலைத்து விடுவேன்......நம்மை முதலில் நன்றாக உபசரித்தவர் ஊர், பெயர், தந்தையின் பெயர் கேட்ட மாத்திரத்தில் நம்மைக் கொலைசெய்யத் துணிந்த காரணம் என்னவோ ஒன்றும் தெரியவில்லையே? ......அவரைத் தாம் கொலை செய்தால் தக்ஷணமே என் பழியை நானே தீர்த்துக்கொண்டு உயிரை விட்டுவிடுவேன். இது சத்தியம். ரயிலோடு போகும் மனிதரை அழைத்துக் கொலை செய்வது தான் அழகோ! அதுதான் தம்முடைய ஆண்மைக்கழகோ! அப்பா! அப்பா! அவருக்கு நாம் உபகாரம் செய்வதாக அழைத்து வந்து உபத்திரவம் செய்வது தருமமாகுமா? ஐயோ! சிற்றன்னை என் விழுந்திருக்கின்றீர்கள்? அப்பா! கையை எடுங்கள். இல்லையேல் கத்தியை என்மீது திருப்புங்கள். உங்கள் கத்தியினால் என்னை முன்னால் குத்தி விட்டு அவரையும் வேண்டுமானால் கொலைசெய்து விடுங்கள்” என்று படபடத்துக் கூறித் தனது தந்தையின் கையைப் பிடித்துத் தடுத்தாள்.

**ராமன் :—** (தனது கையை விட்டுவிட்டு) அடடா! என்னடா இது! நடுச்சந்தியில் விட்டு விட்டாய்? ஏன் என்ன காரணத்தினல் திடீரென்று வழியோடு வந்தவனைக் கொலை செய்ய முயற்சிக்க வேண்டும்? அந்த பெண் பிள்ளை தடுத்தும் விடுவதாகக் காணவில்லையே. அடடா! அடே கண்ணு! இதன் முடிவை யறிய எனக்கு மிக்க ஆவலாயிருக்கிறது. ஆகையினல் நானிதை மிகவும் துரிதமாகப் படித்துத் திருப்பி விடுகிறேன். முதலில் எனக்குக் கொடு. (புத்தகத்தைப் பிடுங்குகின்முன்)

**கண்ணன் :—** அடே முரட்டுத் தனம் செய்யாதே! படித்துத்திருப்பு வது வெகு சுலபம் தான். உனக்கு வேண்டுமானல் நான் ஜகன் மோகினிக்குச் சந்தாதாரனகையினல் குறைந்த விலைக்கு வாங்கித் தருகிறேன். ரூபா 1—8—0 கொடு. எனக்கும் அப்படியே முடிவை யறிய ஆவலாயிருப்பதால் நான் காடுக்க முடியாது.

**ராமன் :—** (புத்தகத்தை வாங்கிப் புரட்டிப் பார்க்கிமுன்) "ஆகா ஆப்டோன் படங்கள் அழகாக விழுந்திருக்கின றனவப்பா! பேஷ். இந்த குண்டு குழந்தையைப் பார்த்தாயா! பலே! நீ படித்த செய்தி படமாக விருக் கிறது பார்! அடேய்! முதலில் இதை எனக்குத் தருவித்துக் கொடு. இந்த சண்பகவிஜயத்தைப் பற்றிய அபிப்பிராயங்களை சில ப்ரபல பத்திரிகைகளில் பார்த்தேன். நேரில் இப்போது பார்த்ததும் உடனே வாங்குவதற்கு மனம் பதறுகின்றது. இந்தா ரூபாய் 1—8—0 இன்றே அனுப்பிவிடு. இதோ படித்தாயா! இந்தியமாது ஆங்கிலவேடந்தரித்து உதவி புரிகின்முளாமே! தம்பதிகளின் ஒற்றுமை யிருந்தால் இவ்வித மல்லவா இருக்கவேண்டும்? நீ இன்றே இதற்கு மணியார்டர் செய்து மறுவேலை பார்.

**கண்ணன் :—** ஆகா! இன்றே செய்து விடுகிறேன். நீ வாங்கியது போல உனது சிநேகிதர்களையும் வாங்கும் படிக்கும் சந்தாதாரராகச் சேரும் படிக்கும் உன்னுலான வரை பிரயாசை எடுத்துச் செய்தால் மிக்க நலமாக விருக்கும்.

**ராமன் :—** அப்படியே! ஆனல் எனக்குச் சஞ்சிகையும் வேண்டும். அதற்கும் இதற்குமாக ரூபாய் 3 அனுப்பிவிடு. என்னை இன்றே சந்தாதாரனக சேர்த்துவிடு. மெத்த சந்தோஷம்.

**கண்ணன் :—** சரி வா. தபாலாபீசுக்குப் போகலாம். (இருவரும் போகிமுர்கள்)


**இனாம்!** **இனாம்!**

**முற்றிலும் இனாம்!**

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

**இனாம்.** **இனாம்.**




எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. முந்துங்கள்.

**காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதறாஸ்.**

---


ஒரு மாதம்

**பாதிவிலை!** **பாதிவிலை!**

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7




22 காரட் ரோல்டு கோல்டு கைகெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதிவிலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

**ஸ்வான் ஹவுஸ்.**

**தபால் நெ. 508, பி, டி, மதராஸ்.**

# "கிருஷிகன்"

**ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.**

**பத்திரிகாசிரியர்கள்:....**

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

# கம்மபாலன்.

---

தமிழ் மாதப்பதிப்பு. கிராமவாசிகளுக்கு அவசியமானது. வருஷ சந்தா ரூ. 1 தான். விளம்பரங்கட்குத் தகுந்த சௌகரியமுண்டு. மாதிரிப் பிரதி இனாம். கம்மபாலன் புக்டிபோவில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி** அம்மாள் இயற்றிய நாவல்களும் மற்றெல்லாவித தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும். விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

R. வேங்கடசாமி நாயுடு,
"கம்மபாலன்" பத்திராதிபர், திருத்தங்கல்.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

## கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

**முதல் ரகம்** விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

| | |
|---|---|
| 18 × 2¾ முழங்கள் விலை ரூ. | 11-8-0 |
| ரவிக்கை துண்டு 1-க்கு | 0-11-0 |

**கோட்டடி:** கறைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்

| | |
|---|---|
| 18 × 2¾ விலை ரூ. | 12-8-0 |
| ரவிக்கை 1 முழம் | 0-12-0 |

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

Except the wrapper the rest is printed in "the Tata Press" Madras.

தன்னுடன் வந்த சினேகிதர்களையும் மஞ்சுளாவையும் அறவே மறந்துவிட்டவனுய் வீதியில் இவர்கள் நிற்குமிடத் தருகில் வந்து மயங்கி நின்றுன். அங்கு நின்ற மோட்டார் பஸ்கள் ஒன்றில் இவர்கள் ஏறினுர்கள். மணிவண்ணனும் 'அவளி ருப்பிடத்தை அறியும் பொருட்டு அவ்வண்டியில் ஏறினுன். பஸ்ஸும் புறப்பட்டு விட்டது; நேரே சென்று.......தெருவில் ஒருமாடி வீட்டினெதிரில் நின்றது. உடனே அந்த மோகனவல்லியும் அவள் மனிதரும் இறங்கி அந்த வீட்டுக்குள் சென்று விட்டார்கள். மணிவண்ண னும் இறங்கி வீட்டை அடையாளம் பார்த்துக் கொண்டான். இதற்குள் பஸ் போய்விட்டது. அங்கு மணிவண்ணன் ஒண்டியாக அகப்பட்டுக் கொண்டான். வேறு வண்டியுமில்லை. பஸ்ஸும் இல்லை. அவர்கள் உள்ளே சென்றதும் கதவும் தாளிடப் பட்டுவிட்டது. ஆகா ! மணிவண்ணன் தன் சுய நினைவை அப் போதே பெற்றுன். "ஐயோ என்ன காந்தி ! என்ன வசீகரம்! ஆகா! பார்த்திருந்தாலும் கலி தீர்ந்துவிடுமே! இவள் தன் வீட்டி னுள் சென்று மறைந்து கொண்டது சந்திரன் மறைந்து இருள் சூழ்ந்தவாருய் விட்டதே!........இதென்ன இது! மணிவண்ணனை என்மனமா சபலமடைகின்றது ! ஆகா ! ஆச்சரியம் ! ஆச்சரியம் ! ! ஓகோ ! நாம் என்ன தப்பிதம் செய்துவிட்டோம். ரங்கநாதனையும் மஞ்சுளாவையும் கொட்டகையில் விட்டு வந்துவிட்டோமே! அவர்கள் என்ன செய்கிருர்களோ! நம்மைப்பற்றி என்ன எண்ணுகிருர்களோ ! சீச்சீ ! மாய உலகமே ! இதனுள் உள்ள சகலமும் மாயமென அறிந் தும் நாம் இவ்விதம் செய்வதழகாமோ ! ஐயோ ! என்னை உண்மை யாக நம்பிய என் மஞ்சுளாவின் மனம் என்னபாடுபடுகின்றதோ ! சீச்சீ ! என் எண்ணத்தில் இடிவிழ!" என்று தன்னையேதான் நொந்துகொண்டு மெல்ல அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு நடக்க லானுன். வெகுவேகமாக நடந்து மீண்டும் கொட்டகையை அடைந் தான். அங்கு வீதியில் இவன் ஏறிவந்த மோட்டார் இல்லாதது கண்டு ஒருகால் எல்லாரும் வீடு சென்றிருப்பார்களோ என்று சந்தேகித்து உள்ளேயும் சென்று முற்றும் பார்த்துவிட்டு வீட்டை நோக்கி நடக்கவாரம்பித்தான். அந்த அர்த்தராத்திரியில் வண்டி யும் கிடைக்கவில்லை. கால்களோ நடக்கமாட்டாது தத்தளிக்கின்றன.

மனமோ அவன் வயப்படாமல் அந்த மோகனுங்கியின்மீதே சென்று லயித்துப் போய்விட்டது. அவனுல் சாத்யமானவரையில் வேகமாகவே நடந்துவருகிருன். தேனும்பேட்டையிலுள்ள அவனுடைய வீட்டை யடைவதற்கு நடந்து நடந்து வழிமாளவில்லை. வரும் வழியில் 5—6 சோதாக்கள் கள்குடித்த வெறியினுல் ஆடலும் பாடலுமாக எதிரில் வருவதைக்கண்ட இவனுக்குச் சற்று பயம் உண்டாயது. எனினும் தைரியமாய் நடந்து சென்று கொண்டிருக்கையில் எதிரில் வந்த சோதாக்கள் தந்தனப் பாட்டு பாடிய படியே மணிவண்ணனைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அகஸ்மாத்தாய்ச் சோதாக்கள், கையில் ஓண்டியாக அகப்பட்டுக் கொண்ட மணிவண்ணன் கலங்கித் துடிக்கின்ருன். அவனுடைய எண்ணமுற்றும் தற்போது தனக்கு என்ன ஆபத்து நேருமோ என்ற பயத்தில் மாறிவிட்டது. அவனுலான வரையில் திமிறிப்பார்த்தான். விடாமல் சோதாக்கள், "டேய். என்னடா துள்ளறே! உம். நாங்கயார்.தெரியுமா? வச்சிடு குறியா ஒன் ஒடம்பிலே இருக்கற நகையை. ஜாக்ரதை" என்று முதுகில் ஒரு குத்து விட்டார்கள். இந்த உபத்திரவத்திஞலும், பயத்திஞலும் மணிவண்ணன், "ஐயோ! ஆ! மஞ்சுளா உனக்குத்ரோகமெண்ணியதற்குப் பலனிதுவோ!" என்று கூச்சலிட்டு மீண்டும் திமிறித் தப்பித்துக்கொள்ள முயன்றும் பயன்படாது விழிக்கின்ருன். ஒரு தடியன் காதிலுள்ள வைரக் கடுக்கனின் மேல் கையைவைத்தான். மற்ஞெருவன் கையில் கட்டியிருக்கும் ரிஸ்ட்டுவாட்சு மீது தாவினுன். வேருெருவன் மோதிரத்தைக் கழற்றமுயன்ருன். பின்ஞெருவன் தங்கப் பொத்தான் மீது பாய்ந்தான். இன்ஞெருவன் ஜேபியில் கையைப் ;போட்டான். அனைவரும் மற்ஞெருகையினுல் மணிவண்ணனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். கூண்டிலகப்பட்ட பெருச்சாளிபோல் மணிவண்ணன் விழிக்கின்ருன்.

முரடர்களால் வழிமறிக்கப்பட்ட மணிவண்ணன் திமிறிச்செல்வதற்குச் செய்த முயற்சியெல்லாம்;வீணுயின. அவன் திகைக்கின்ருன்;"ஐயோ!இதென்ன இது!நம்முடைய காலக்கொடுமையா? ஆகா!

நாம் மதிமயங்கி அந்தப் பிசாசைக் கண்டு மோகித்து நமது கண் மணி மஞ்சுளாவை மறந்ததன் பயனிதுவோ? ஐயோ! நாம் வழி யோடு அவர்களைவிட்டுப் பிரியாமல் வீடு சென்றிருந்தால் இந்த வித மான ஆபத்து நேராதல்லவா?" என்று எண்ணித் துடிக்கின்றான். ஆறு முரடர்களின் கையில் ஒருவன் அகப்பட்டால் திமிறுவதெங் ஙனம் இயலும்? தன்னாலியன்றவளவு பார்த்தும் முடியவில்லை. இதைக்கண்ட சோதாக்கள் ஏளனமாக நகைத்தபடியே, "ஏய் என்னா டான்ஸ்பண்ணறே! பேஷ். ஆட்டம் ஜோக்கா இருக்குது. இதோ! இன்னும் ஆடு பாக்கலாம்" என்று கூறி அவனது இரு புயத்தையும் பிடித்து அவர்கள் பலங்கொண்டமட்டும் ஆட்டுகின்றார்கள். இந்த உபத்திரவம் தாங்கமாட்டாத மணிவண்ணன் அதிக ஆத்திரமும், ஏமாற்றமும், பதைப்பும் அடைந்தவனாய்ப் பேசத் தொடங்கி; "அடேய் சோதாப்பயல்களே! என்னை எதற்காக இவ்விதம் உபத் திரவிக்கின்றீர்கள்? உங்களை நான் என்ன செய்தேன்? வழியோடு செல்வதைவிட்டு வீண்வம்புக்கு என்னை ஏன் இழுக்கின்றீர்கள்? என்னை விட்டுவிடுங்கள். நான் போகவேண்டும்" என்று முடுக் காகக் கூறினான்.

இதைக்கேட்ட அந்த முரடர்கள் நகைத்தபடியே, "ஓயப்பா! என்ன அதிகாரம்! உன்னை நாங்களா உபத்திரவிக்கிறோம். ஏன் வீணாகப் பொய்யுரைக்கின்றாய்? எங்களுக்குச் சேரவேண்டிய இந் தப் பொருள்களைக் களைந்து வைத்துவிட்டுத் தாராளமாய்ப் போக லாமே! இல்லையேல் பின்னர் நடக்கும் வேடிக்கைகளையும் பார்த் துக்கொள்ளேன். என்ன சொல்லுகிறாய்? உம். கழட்டு" என்று கூறி அவன் தேகத்தைப் பிடித்துக் குலிக்கினார்கள்.

தான் இவர்களிடமிருந்து எவ்விதம் தப்புவது என்னும் வழி யறியாமல் தவித்துக்கொண்டிருக்கும் மணிவண்ணனுக்குத் தனது வஞ்சக எண்ணம் நெஞ்சத்தைப் பிளக்கின்றது. அவன் தன்னா லானமட்டும் பார்த்தான். தெளி வேற்படவில்லை. "ஏ! மணி வண்ணா! சற்று முன் நீ மஞ்சுளாவை வஞ்சித்ததற்கு இதுதான் தக்க தண்டனை" என்று யாரோ எதிரில் நின்று கூறுவதுபோல் அவன் மனத்தில்;ஓர் எண்ணந்தோன்றி அது அவனை வதைக்கின்

றது. அந்த திடும்ப்ரவேசமானது அவனைச் சித்திரவதை செய்கின்றது. அவன் இன்னது செய்வதென்று அறியாது தவித்துப் பேசாது நின்ருன். இதைக்கண்ட முரடர்கள் "டேய், என்ன யோசனை செய்கிருய்? உன் உயிர் வேண்டுமானுல் சீக்கிரம் கழட்டி வைத்துவிடு" என்று அதட்டினுர்கள். இந்த வேதனையையும் அவர்களின் முரட்டுத்தனமான உபத்திரவத்தையும் தாங்கமாட்டாத மணிவண்ணன், "ஆ! என்ன செய்வேன்" என்று தவித்தான். அத்தருணம் அங்கு ஒரு மோட்டார் வண்டிவரும் சத்தம் கேட்டது. உடனே எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். அதே தருணம் மோட்டார் அங்கு வந்து நின்றது. அதனின்றும் வெகு தைரியத்துடன் ரங்கநாதன் இறங்கினுன். அவ்விடத்தில் மணிவண்ணன் நிற்பதையும் அவனை 5—6 முரடர்கள் பிடித்துக்கொண்டிருப்பதையும் கண்டு பயந்து நடு நடுங்கிவிட்டான். எனினும் அவன் தைரியத்துடன் உரத்த குரலில், "அடே மணிவண்ணு! இதென்ன அமர்க்களம்!" என்று கேட்டான்.

அவனை ரங்கநாதனென்று அறிந்த மணிவண்ணன் சற்று மனதில் தைரியங்கொண்டு, "ஆகா! தாங்களா! போலீஸ் இன்ஸ்பெக்டரா! நல்ல சமயத்தில் வந்தீர்கள்! இந்த முரடர்கள் என்னை வீணே மடக்கிக்கொண்டு உபத்திரவிக்கின்ருர்கள். தாங்கள் சமயத்திற்குக் கடவுள்போல வந்தீர்கள்" என்று தந்திரமாயும் சமயோசிதமான சாதுரியமாயும் கூறிய வார்த்தையைக் கேட்ட ரங்கநாதனும் வியப்புற்று ப்ரமித்தவனுய், வாயினுலேயே பலத்த சத்தமிட்டு விசிலடித்துவிட்டு "இதோ எனது வீரர்கள் (போலீஸ் புலிகள்) வருவார்கள். பயப்படாதே" என்று கர்ஜித்தான்.

இந்த வண்டி வந்ததும் அதிலிருந்து இறங்கிய ரங்கநாதனையும் சேர்த்துப் பிடித்து இம்சிக்கத் தயாராக இருந்த முரடர்கள், மணிவண்ணனின் வார்த்தையையும், ரங்கநாதனுடைய நடிப்பையும் உண்மை என்று நம்பி ஒரே ஓட்டமாக ஓட வாரம்பித்தார்கள். அதற்குள் இவ்விருவரும் அவர்களைத் தடுத்துப் பிடிக்க முயன்றும் அவர்கள் திமிறிக்கொண்டு ஓடிவிட்டார்கள்; பின்னர் இருவரும் செத்தோம்; பிழைத்தோம் என்று எண்ணியவாறு அவ்விடத்தைவிட்டு மோட்

டாரில் ஏறிக்கொண்டு மணிவண்ணன் வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

ரங்க :—என்னடா மணிவண்ணா! இந்நேரம் எங்குச் சென்றாய்? கொட்டகையில் உன்னை எங்கு தேடியும் காணவில்லையே ?

மணி :—(ஆகா ! என்னவிதமான பதிலளிப்பது! ஐயோ ! வெட்கக்கேடே !'' என்று தனக்குள் விசனிக்கின்றான். பின்னும் பேசத் தொடங்கி) "இல்லை அப்பா ! என்னுடன்கூட வேலையாக இருக்கும் நண்பரொருவர் வந்திருந்தார். நீ செட்டியாரிடம் எழுந்து சென்றதும் நானுமவரைக் கண்டேன். அவருடன் பேசிக் கொண்டே இருக்கையில் கொட்டகையில் அமர்க்களமும் கலபையும் உண்டானபடியால் எனது நண்பர்மீது ஜனங்கள் விழுந்து நசுக்கிவிட்டார்கள். அவர் சற்று ஒரு மாதிரியானவராதலால் அவருக்கு மயக்கம் வந்து விட்டது. நான் மெல்ல சமாளித்து அவரை வெளிப்படுத்தி அவர் வீட்டில் கொண்டு விட்டுவிட்டு வந்தேன். வண்டியொன்றும் அகப்படாமையால் நடந்து வரும்படியாக நேரிட்டது. வழியில் இந்த முரடர்கள் சுமார் கால்மணி நேரமாக என்னைப் பிடித்து இம்சைசெய்து வந்தார்கள். நல்ல வேளையாக நீ வந்தாய் ! தப்பினேன்.

ரங்க :—எனக்குப் போலீஸ் இன்ஸ்பெக்ட்டர் வேலை ஒரு விநாடியில் கொடுத்து விட்டாயே ! பலே ! மணிவண்ணா ! உனது சமயோசிதமான புத்தியை அனேக விதத்தில் கண்டு மெச்சியுள்ளேன். இன்று உனது மகா மேன்மையான யோசனையின் தந்திரமான வார்த்தையைக் கேட்ட என் தேகம் மெய்மறந்து பூரிக்கின்றது. ஆகா ! உனது மனைவி துடி துடித்து வருந்தியபடியே வீதியிலேயே உட்கார்ந்திருக்கிறாள். இந்தக் கூட்டத்தின் கலாடாவில் மஞ்சுளாவுக்கும் மயக்கம் வந்துவிட்டது. அவள் விழுந்து விட்டாள். மெல்ல மயக்கந் தெளியவைத்து அவளை வீட்டில்விட்டு வந்தேன். அவள் உன் வரவையே எதிர்பார்த்து பயந்தபடியே உட்கார்ந்திருக்கிறாள்'' என்று இவன் சொல்லிக்கொண்டே வருகையில் மணிவண்ணனின் மனத்தில் தனது வஞ்சக எண்ணமுற்றும்

தோன்றி அவனைக் கொன்று வதைக்கின்றது. "ஐயோ! நான் அந்தப் பெண்ணை கூட்டம் தள்ளாதபடி பிடித்திருந்ததை யொருகால் மஞ்சுளா பார்த்திருப்பாளோ?; இன்று காலையில் அவள் பாடிய ஒரு பாடல் என்னை இடித்துக் காட்டுவதுபோல் நினைவிற்கு வருகின்றதே! என்ன செய்வேன்? ஆ! மஞ்சுளவல்லி! உனக்குத் துரோகம் எண்ணியதற்கு முதற்பயனாக ஈசன் என்னை முரடரிடம் அகப்படும்படி செய்தான். இனி நான் என் மனத்தைத் திருப்பிக் கொள்கிறேன்" என்று பலவிதமாக யோசித்துக் கொண்டிருக்கையில் வண்டியும் வீட்டு வாயிலை அடைந்து நின்றது.

மாரியை ஆவலோடு எதிர் நோக்கி நிற்கும் பயிரைப்போல மஞ்சுளவல்லி தனது ப்ராணபதியின் வரவை வெகு ஆவலோடு எதிர் பார்த்திருந்தாள். அவள் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித் துடிக்கின்றது. "ஆகா! கைகொடுத்து அணைத்துக் கொண்டிருந்த அந்தப் பாவை யாரோ தெரியவில்லையே! ஒருகால் அவள் விலைமாதாக விருப்பாளோ? அவள் மோகத்திலீடுபட்டு அவள் பின்னால் சென்றுவிட்டாரோ? சீச்சீ! அவ்விதம் நினைப்பது தவறு. என் ப்ராணகாந்தரா அவ்விதம் செய்வார்? என்ன காரணத்தினால் அவளுக் குதவியாக நின்றிருப்பார். அதை விசாரித்தால் தெரியும்." என்னும் எண்ணத்துடன் சாளரத்தின் வழியாய்ப் பார்த்த வண்ணம் வீற்றிருந்த தருணம் வண்டி வந்து நின்றது. உடனே அவள் துள்ளியோடி வீதிக் கதவைத் திறந்தாள். முதலில் முன்போல ரங்கநாத னிறங்கியதும் இவளுடைய மனவேகத்தின் நிலைமையில், "ஆ! என் ப்ராணநாதர் வந்தாரா!" என்று கேட்டு வாய் மூடுமுன் இவளுடைய நிலையையும் அன்பின் முதுமையையும் கண்டு வியந்தவாறு "ஆகா! மஞ்சுளா! இதோ வந்து விட்டேன். பயப்படாதே!" என்று கூறிக்கொண்டே மணிவண்ணன் இறங்கினான்.

இவனைக் கண்ட மஞ்சுளா மதியைக் கண்ட ஆம்பல்போல மலர்ந்துவிட்டாள். அவள் அங்கு அன்னியன் நிற்கிறான் என்பதையும் மறந்து "ஆகா! என் ஜீவாதாரமே! இத்தனை நேரம் ஏன்

தாமதம்?'' என்று கேட்டாள். அப்போது ரங்கநாதன் காலையில் வருவதாகச் சொல்லிவிட்டு வண்டியிலேறிப் போய்விட்டான்.

மணிவண்ணனும் தனது எண்ணத்தைச் சற்றுமறந்தவனுய், வீதிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு மஞ்சுளாவுடன் உள்ளே சென்றுன். உடனே மஞ்சுளா படுக்கையைத் தட்டிப் போட்டாள். மணிவண்ணனும் மஞ்சத்திலமர்ந்தபடியே "கண்மணீ! மஞ்சுளா! என்மீது கோபங்கொண் டிருக்கிறுயோ!'' என்று கேட்டபடியே அவளது கரத்தை மெல்லப்பற்றி இழுத்து அணைத்துக் கொண்டான்.

**மஞ்சுளா:**—நாதா! தாங்கள் எங்குச் சென்றீர்கள்? காணுது மறைந்து விட்டீர்களே! அத்தனை குழப்பத்தில் தங்களைவலைபோட்டுத் தேடியும் அகப்படவில்லையே!

**மணி:**— (நமது செய்கையை அநேகமாய் இவள் பார்த்திருக்கமாட்டாள். ரங்கநாதனிடம் தெரிவித்த படியே இவளிடமும் பொருத்தமாகத் தெரிவித்து விடுவோம் என்று எண்ணி) "எனதின்பவடிவமே! எனது ஆபீஸ் நண்பனெருவன் வந்திருந்தான். அங்குண்டான எதிர்பாராத கலக்கத்தில் அவனுக்கு மயக்கமுண்டாய்விட்டது. உங்களை ரங்கநாதன் எப்படியும் வீட்டுக்கழைத்துச் செல்வானென்ற நோக்கத்தில் நான் அவனுக்கு மூர்ச்சை தெளிவித்து அவன் வீடு கொண்டுபோய்ச் சேர்த்து வருகையில் வழியில் சில முரட்டுத் திருடர்கையில் அகப்பட்டுக் கலங்கினேன்; ரங்கநாதனுல் தப்பி வந்தேன்'' என்று கூறித் தப்பிய விதத்தைத் தெரிவித்தான்.

இதைக்கேட்ட மஞ்சுளா "இவர் கூறுவது சற்றும்பொருத்தமில்லாத கட்டுக்கதை. கொட்டகையில் கலவரம் உண்டானபோது இவர் வேறு பெண்மணியுடன் நிற்கக் கண்டோம். ஆதலால் இவர் பேச்சைக் கொஞ்சமும் நம்புவதற்கில்லை'' என்று மனத்தி லெண்ணினுள். ஆனுலும் அவள் நல்ல புத்திசாலியாகையினுல் அவசரப்பட்டு எதுவும் கொட்டிவிட லாகாதென்றெண்ணிச் சாந்தமாகவே பேசத் தொடங்கி "ஆகா! அப்படியா! தங்கள் நண்பருக்கா மூர்ச்சையுண்டாய் விட்டது? நான்

அப்போதே நினைத்தேன். தாங்கள் முக்கியமான வேலையில்லாமல் எங்கும் செல்ல மாட்டீர்களென்று! அப்படியேதான் முடிந்தது. ஐயோ! பாவம்! அவருக்கு மூர்ச்சை தெளிந்துவிட்டதா?'' என்று நயமாகக் கேட்டாள்.

மணிவண்ணன் "இவள் ஒன்றுமறியாமலே பேசுகின்றாள்'' என்று நம்பித் தன்னுடைய வஞ்சக நடவடிக்கையை அவளறியாதது பற்றி மகிழ்ந்தவனாய், "ஆகா! அவர் நன்றாகத் தெளிவடைந்து விட்டார். பேசிக்கொண்டிருக்கிறார். அதன் பின்னரே நான் வந்தேன். அடா! மணி இரண்டாய்விட்டதா! மஞ்சுளா! படுத்துக் கொள். நடுநிசிக்கு மேலாய்விட்டது. அகாரணமாக அலைச்சலும் ஆயாஸமும் ஏற்பட்டு வருத்திவிட்டன'' என்று கூறி ஆயாஸமடைந்தவன்போல் பெருமூச்சுவிட்டான்.

இதைக்கேட்ட மஞ்சுளாவின் மனம் உண்மையைத் தெரிந்து கொள்வதற்குப் பறக்கிறது. ஆயினும் அகாரணமாக வார்த்தை பேசித்தானே அதைக்கேட்க பிரியப்படாமல் அவள் தனது இடத்திற் படுத்துக்கொண்டாள். சந்தேகத்தை எவ்விதம் நிவர்த்தி செய்து கொள்வதென்ற யோசனை பலமாயிருந்தபடியால் மஞ்சுளாவுக்கு நித்திரை பிடிக்கவில்லை. மணிவண்ணனுக்கோ அன்று கண்ட மோகினியின் மீதே மனம் எட்டித் தாவுகின்றது. எப்படி விலக்கினாலும் அவனால் அந்த எண்ணத்தை மறக்கமுடியவில்லை. அவளுருவம் மனத்தில் புகைப்பட உருவம்போல் பதிந்து விட்டபடியால் அது அவனை வதைக்கின்றது. மீண்டும் அவ்வுருவத்தை எப்போது காண்போம், எந்தவிதமாகக் காணலாம் என்ற யோசனைகளே அதிகமாக மனத்தில் பெருகியோடுவதால் அவன் நித்திரை கொள்ளாமல் தவித்துப் புரண்டு பெருமூச்செறிந்தவாறு படுத்திருக்கிறான்.

இவ்விதமான மனவேறுபாட்டினாலேயே இருவரும் நித்திரையின்றி இரவைக் கடத்தினார்கள். மஞ்சுளா விழித்திருப்பதை மணிவண்ணனறியான். மணிவண்ணன் நித்திரா பங்கத்தை மஞ்சுளா முற்று மறிவாள். அவளதையும் நேரிலறிந்த பின்னர் முன்னிலு

மதிகமான சந்தேகங்கள் அவளை வந்து சூழ்ந்துகொண்டன. என்ன காரணத்தினுல் அந்தப் பெண்ணை இவர் அணைக்கவேண்டும்? திடீரென்று இன்று அவ்விதம் செய்திருப்பாரா! அல்லது முன்னிருந்தே இவருக்கு அவளிடம் பழக்கமுண்டா யிருக்குமோ! அவ்விதமிருப்பின் வீட்டைவிட்டு ஒருதினமேனும் இவர் இரவில் வெளிச்செல்வதில்லையே! பகற்காலமுழுதும் ஆபீஸில் செல்கின்றது. இவருக்கு நேரமே கிடைப்பதில்லையே! அவ்வித மிருக்க நாம் அவ்வாறு நினைப்பது சரியல்ல. இன்றே ஒருகால் மயங்கியிருப்பாரோ! இன்று மாலை முதல் என்னிடம் பேசுவதெல்லாம் வித்தியாசமாகவே இருக்கின்றன. அதோடு அங்கு நடந்ததை இவர் மறைத்து வேறு விஷயத்தை வெளியிட்டதுமல்லாமல் நித்திரையின்றிப் புரளுவதையும் பெருமூச்செறிவதையும் கண்டால் எனக்குப்பெரிய சந்தேகமாயிருக்கின்றதே! எதற்கும் நாளையதினம் பார்த்துக் கொள்வோம்'' என்று எண்ணியபடியே இரவைக்கடத்தி விடியுமுன்னெழுந்து தனது க்ருக க்ருத்தியங்களைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

வழக்கம்போல் காபி உப்புமா முதலியவைகளைச் செய்து தயாராக வைத்து விட்டுத் தனது ஸ்நானத்தை முடித்துத் துளஸி பூஜை முதலியன செய்து கொண்டு வந்தாள். மணி ஏழுக்கு மேலாய்விட்டது; அப்போதும் மணிவண்ணன் எழுந்திருக்கவில்லை. அதுகண்ட மஞ்சுளா "இரவு கண் விழித்ததால் இப்போது அயர்ந்து நித்திரை செய்கிறுர். நாம் எழுப்பி ஆயாசமுண்டு பண்ணலாகாது'' என்று நினைத்துத் தன் பர்த்தா கொணர்ந்த புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினுள். மணி 8 அடித்தது; மணிவண்ணன் எழுந்திருக் காமையினுல் மஞ்சுளாவிற்குப் படிப்பிலும் கவனம்செல்லவில்லை. உடனே அவள் எழுந்து கட்டிலருகில் சென்று நின்றுள். அப்போது மணிவண்ணனுடைய மனத்தில் பதிந்து கிடக்கும் எண்ணத்தின் விஷயமே அவனுக்குக் கனவு ரூபமாகத் தோன்றியதால் அவன் "ஆகா! அந்த ஆரணங்கின் தரிசனும்ருதம் எனக்குக் கிடைக்குமோ!'' என்று வாய்விட்டுக் கூறிவிட்டான். ஆகா! இதைக்கேட்ட மஞ்சுளா திடுக்கிட்டு "ஆ! நான் எண்ணியவாறே ஆய்விட்டதே! அடடா! இவருடைய மனம் பெண் மோகத்தில் மயங்கிவிட்டது நிச்சயம். உம். இவர் வாயினுலேயே இதன் உண்

மையும் வந்துவிட்டது. ஐயோ! இதென்னவிந்தை! எப்பேர்ப்பட்ட உறுதியுள்ள மனம் அரைக்கணத்தில் இவ்விதம் மயங்கிவிட்டதே" என்று வியந்தவாறே ஒன்றும் செய்யத்தோன்றாது தம்பித்து நின்றுவிட்டாள். எனினும் தன்னையொருவாறு தேற்றிக்கொண்டு மெல்லிய குரலால் "நாதா! நாதா! மணி எட்டடித்து விட்டதே; இன்னும் நித்திரை தெளியவில்லையா!" என்றாள்.

அவளது குயில்போன்ற குரலோசையைக் கேட்டவுடன் அலறியவாறு கண்விழித்துக்கொண்டு மணிவண்ணன் எழுந்தான். அவன் இந்நேரங் கண்டதெல்லாம் கனவு என்பதை அறிந்ததும் ஏமாற்றமடைந்து அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் "ஆகா! இரவில் வெகுநேரம் விழித்திருந்தபடியால் மணிபோவதை யறியாமல் இந்நேரம் நித்திரை போய்விட்டேன். என்ன மஞ்சுளா! நீ ஸ்நானம் செய்தாய்விட்ட ;தென்று தெரிகின்றதே! எப்போது எழுந்தாய்? இரவு உனக்கும் தூக்கமில்லையே! இப்போது இதற்குள் எதற்கு எழுந்தாய்? இன்னும் சற்றுத் தூங்கலாகாதா?" என்றான்.

தனது நாதனின் வார்த்தையைக்கேட்ட மஞ்சுளா நகைத்தபடியே "இரவு கண் விழித்த பாதைக்கு விடியு முன்னெழுந்து குளிர்ந்த ஜலத்தில் நன்றாக ஸ்நானம் செய்தால் பித்தகூடும் சமனமாய்த் தேக ஆரோக்கிய மேற்படும். அதனாலேயே ஸ்நானம் செய்தேன். தாங்கள் இரவுமுற்றும் நித்திரை யின்றிப் புரண்டு விடியற்காலம் நித்திரை செய்ததால் நான் எழுப்பவில்லை. தாங்களும் எழுந்து முதலில் ஸ்நானத்தைச் செய்து விட்டுப் பின்னர்க்காலை போஜனம் செய்தால் நிம்மதியாகவிருக்கும்" என்றாள். உடனே மணிவண்ணன் எழுந்து கைகால், பல் முதலியன சுத்தி செய்துகொண்டு தயாராய் விளாவி வைத்திருந்த வெந்நீரில் ஸ்நானம்செய்து திருநாமமிட்டுக் கொண்டு, பூஜை முதலியவைகளைச் செய்து பின் காலைப்போஜனத்திற்கு உட்கார்ந்தான். அவனுடைய எண்ணமுற்றும் சீக்கிரம் தன் வேலைகளை முடித்துக்கொண்டு தன் மனத்தில் புகுந்து வேலைசெய்யும் வடிவத்தைக் கண்டு ஆநந்திப்பதிலேயே சென்று லயித்துப்போயிருந்தபடியால், அவன் தனது பூர்ண இஷ்டத்துடன் போஜனத்தை யருந்தவில்லை.

இவனது நிலைமையை முற்றிலுமறிந்த மஞ்சுளாவின் சந்தேகங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. தான் இதை எவ்விதம் கேட்டறிவதென்று யோசித்தபடியே அவள் மெல்ல பேச்சுக் கொடுக்கவாரம்பித்தாள்; "நாதா! நேற்று நாராயணன் நாடகக் கொட்டகையில் நடந்த மோசத்தின் முடிவு எவ்விதமாயிற்று? எந்த மனிதன் இவ்விதம் துணிகரமாக ஒரு பெரிய பட்டணத்தையே ஏமாற்ற முன் வந்தான்? ஒருவிதத்திலும் சிறிதும் சந்தேகிக்க ஏதுவின்றி இத்தனை பெரிய காரியத்தை எவன்தான் செய்திருப்பான்? ஏதாவது சாக்ஷயம் கிடைத்ததா! ஆசாமிகளோ, யாரேனும் அகப்பட்டார்களா? அடடா! என்ன அமளி! என்ன குழப்பம்! சென்ற மனிதர்கள் உயிர்தப்பி வீடுவந்து சேருவதாக யாரும் எண்ணவில்லை. ஐயோ, பாவம்! ஓர் அழகிய இளம்பாவை. அவளை உயிர் நீங்கிடும்படியாக நசுக்கி யடித்து மேலே விழுந்து ஓடத் தலைப்பட்டார்கள். அந்தப் பெண் திண்டாடித் தவித்து விட்டாள். நல்ல வேளையாக யாரோ ஒரு புண்ணியாத்துமா அவள்மேல் கும்பல் படாதிருக்கும்படி தமது கைகளால் தடுத்து நின்றூர். பின் புறத்தில் பார்த்தபோது அவர் தங்களைப்போலவே தோன்றிற்று. நானும் கூட உதவிக்கு வரலாமென்று எண்ணினேன். ஆனல் தாங்களோ யாரோ அதைச் சந்தேகமறத் தெரிந்து கொள்ளாமல் எவ்விதம் செல்வதென்று வாளாவிருந்தேன். எனினும் என்னையும் நகரவிடாமல் கூட்டம் நசுக்கிவிட்டதனல் வருவதற்குச் சாத்ய மில்லாமற் போனதுடன் மயக்கமும் வந்துவிட்டது. அந்தப் பெண்ணின் கதி எப்படியாயிற்ரே!" என்று இவள் கூறிக்கொண்டே வருகையில் மணிவண்ணன் திடுக்கிட்டான். "ஐயோ! மஞ்சுளா நம்மை அந்த நிலைமையில் கண்டு விட்டாள்போல இருக்கின்றதே! அடடா! நாம் சொல்லிய சமாதான முற்றும் பொய் என்பதை இவள் அறிந்துகொண்டாளோ! ஐயோ! இந்த வார்த்தைக் கென்ன பதில் கூறுவது? ஒருகால் என்னைப் பரீக்ஷிக்க வெண்ணிக் கேட்கின்றுளோ? இதற்கு நாம் தகுந்த பதிலளிக்காவிட்டால் விகாரமாய்விடும்" என்று முடிவுகட்டிக்கொண்டு பேச்த்தொடங்கி "நீயும் ஒத்தாசைக்கு வருவாயோ என்றுதான் நானும் சுற்றுமுற்றும் பார்த்தேன். உன்னைக் காணவில்லை. நேற்று அந்தப் பெண்ணுக்கு

ஒரு கண்ட நாளென்றே கூறலாம். அவள்மீது ஜனங்களை விழ வொட்டாமல் தடுத்துப் பிடித்தவன் நான்தான். அவள் உயிர்போய் விடும்போலான நிலைமையில் அவஸ்தைப்பட்டதைக் கண்டு சகிக்க இயலாமல் நான் சென்று வழி செய்துவிட்டதில் அவர்கள் போனூர் கள். பின்னரே நான் எனது நண்பனின் அருகில் சென்றேன்.

மஞ்சுளா:—ஓகோ தாங்கள்தானு! அடடா! எனக்கு அப் போதே சந்தேகமறத் தெரிந்திருந்தால் நானும் வந்து உதவிபுரிந் திருப்பேனே! மனிதருக்கு மனிதர் உதவி புரியாவிட்டால் அந்த ஜென்மம் எதற்கு! ஐயோ, பாவம்! அவளுக்கு நன்ருகக் குணமாய் விட்டதா! இப்போது எப்படி யிருக்கின்ருளோ! — என்று சொல்வதைக்கேட்ட மணிவண்ணனுக்கு அவள் உண்மையாகக் கூறுவதுபோலும் தோன்றுகின்றது. 'ஒருகால் தன்னைச் சோதித் துத் தன் வாய்ப்பேச்சை வாங்குவதற்காக இவ்விதம் சொல்கின் ருளோ என்னும் சந்தேகமுமுண்டாகிறது. "எதை உண்மை என்று நம்பிப் பதிலளிப்பது" என்றும் யோசிக்கின்ருன். அவள் கூறுவது உண்மையான அனுதாபத்துடன் தான் என்று அதற்குத் தக்க விடை பகரின் அதை வித்தியாசமாக எண்ணித் தன்மீது சந்தேகிப் பாளோ, என்ற பெருத்த யோசனையினுல் அவன் மனம் மயங்கு கின்றது. "அவள் வித்தியாசமாகத்தான் சொல்கிருள் என்று அதன் படி பதிலளிப்பதே உசிதமென எண்ணினுலோ மகா யூகசாலியும் புத்திசாலியுமான மஞ்சுளா நமது வார்த்தையில் ஏதேனும் தப்பி தம் கண்டுபிடித்து மடக்குவாளோ! நாம் இருவகையிலும் பிடி கொடாது பேசுவதே உத்தமம்" எனத்தீர்மானித்தவனுய் "என்ன மஞ்சுளா! அந்தப் பெண்ணிடத்தில் உனக்கத்தகைய அனுதாபம் ஏன்? ஏதோ ஆபத்து வேளையில் கை கொடுத்துத் தேற்றிவிட்டால் பின்னர் அவர்கள் எப்படியானுர்கள் என்று நாம் தேடுவதா என்ன? எதிரில் ஒருவர் அபாய நிலைமையில் இருக்கக்கண்டால் சும்மா இருப் பது அழகல்ல; ஆகையால் உதவிபுரிய வேண்டியதவசியம். பிறகு கண்ணில் தென்பட்டால் விசாரிக்கலாம். அவர்களிருப்பிடத்தை யறிந்து நாம் ஏன் அலையவேண்டும்?" என்று கூறிக்கொண்டே உப்பு மாவைச் சாப்பிட்டு விட்டு எழுந்து காப்பியைப் பருகிப் பின் முன் கூட்டில் ஆயத்தமாகவிருந்த வெற்றிலைபாக்கைப் போட்டுக்கொண்டு

தனது சட்டையை அணிந்து வேறு உடை தரித்துக்கொண்டு வெளிக்கிளம்ப ஆயத்தமாக நின்ருன். அத்தருணம் ரங்கநாதன் அங்கு வந்து சேர்ந்தான். இவனைக் கண்ட மணிவண்ணனுக்கு அருவருப்பும் எரிச்சலுமுண்டாய் விட்டன. "சரியாகப் புறப்படும் சமயத்தில் அதைத் தடுப்பவன்போல் இவன் வந்துசேர்ந்தானே" என்று எண்ணி உள்ளுக்குள் முணகியபடியே வெளியிட்டுக்கொள்ளாமல் 'ஆகா! வாடா, ரங்கா! உன்னையே நினைத்தேன். நீயும் வந்தாய். இரவு சங்கதி எப்படி யிருந்தது பார்த்தாயா! அந்த நாடகம் எவ்விதமேனும் இருக்கட்டும். நாம் முரடர் கையில் அகப்பட்டு நடித்ததே பெருத்த நாடகமாய் விட்டதே! மஞ்சுளா! உப்புமா, காப்பி கொண்டுவா!" என்ருன். உடனே ஒருதட்டில் உப்புமாவும் லோட்டாவில் காப்பியும் கொண்டுவந்து வைத்தாள். ரங்கநாதன் "எனக்குப்பசியில்லை;வரும்போது சாப்பிட்டுவிட்டு வந்தேன்" என்று கூறியும் கேட்காமல் பலவந்தித்துப் புசிக்கும்படியாகக் கூறியதின் பேரில் அவன் அவற்றைச் சாப்பிடத் தொடங்கினன்.

ரங்கநாதன்:—என்னடா மணிவண்ணு! எங்கேயோ கிளம்புவதாகத் தெரிகின்றதே! அதற்குத் தடங்கலாக நான் வந்து சேர்ந்தேனு என்ன!

மணிவண்ணன்:—அப்படி ப்ரமாதமானகாரியம் ஒன்றுமில்லை. ரஜாதினமாகையினல் சற்று வெளிச்சென்று வரலாமென்றும், இரவு நாடகதடபுடல் எவ்வித மிருக்கின்றது விசாரித்துப் பார்ப்போம் என்றும், நேற்று மூர்ச்சித்து விழுந்த சிநேகிதர் எவ்விதமானர் என்பதையும் பார்த்துக் கொண்டு வரலாம் என்றும் புறப்பட்டேன். வேறு ஒன்றுமில்லை; நீ வந்ததால் தடை ஒன்றுமில்லை.

ரங்கநாதன்:—என்ன அநியாயம் பார். எத்தனை சாமர்த்திய சாலியாகவும் தந்திரமாயாவியாகவும் இருந்தால் இந்தக்காரியத்தைத் துணிகரமாய் நடத்த முன் வந்திருக்கவேண்டும். அட்டா! நினைத்தால் வியப்பின்மேல் வியப்பாக விருக்கின்றதே யன்றி ஒன்றும் புரியவே இல்லையே! கொட்டகையை வாடகைக்கு வாங்கி, நோட்டீஸ் முதலியன அச்சடித்துப் பகிரங்கமாக பாண்டு மேளத்துடன்

182844

வீதிதோறும் வண்டியிலலைந்து ஊரெங்கும் விளம்பரஞ் செய்து அத்தனை ஜனங்களுக்கும் கொடுத்து விட்டுப் பின்னர்த் திடீரென்று எவ்விதமாகவோ இந்த விதமான மோசம் செய்துவிட்டானே! டிக்கட்டு கொடுத்துக்கொண் டிருந்தவனையும் காணவில்லையாம். மேடைமேலேறிப் பார்த்ததில் அந்தத் திரையைத் தவிர வேறு ஒரு துடைப்பக்குச்சிகூட இல்லையாம். இதென்ன ஆச்சரியம் பார்.

மணிவண்ணன் :—அந்தப் பக்காத்திருடன் இவ்விதம் மோசம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடனேயே வெகு பக்குவமாயும் நம்பும்படியான தந்திரத்துடனும் வேலை செய்திருக்கிறான். அவன் தன்னைக் கண்டுபிடிக்கக், கூடிய விதமான தடையங்கள் அகப்படும்படியாகக் கொஞ்சமும் நடக்கவில்லை. தகுந்த உஷாரின் மேலேயே சகல வேலைகளையும் அவன் செய்திருக்கிறான். தான் காட்டுவதாகத் தெரிவித்த நாடகங்கள் இன்ன இன்னதென்று எழுதிக்காட்டினானே! அதுவேஎனக்கு அடங்காதவியப்பையும்திகைப்பையும்தருகின்றன. அந்தக் காரியம் செய்தமனிதன் சாமானிய மனிதனாக இருக்கமாட்டான். பெரிய சூனியக்கார மந்திரவாதியாகத்தானிருக்க வேண்டும். இந்த அதிசயமான மோசத்தை நாயுடு எவ்விதம் கண்டு பிடிக்கப்போகிறாரோ! அது சந்தேகந்தான். நாயுடுவே மகாமாயாவி என்று சொல்கிறார்கள். இன்னும் அவரை ஏமாற்றும் பெரிய கல்லடி சித்தனாகவல்லவா இவன் வந்து விட்டான். என்னவிதமாக நடக்கப் போகிறதோ!

ரங்கநாதன் :— நடப்பதென்ன விருக்கின்றது? அவனுடைய அதிர்ஷ்ட காலம் அகப்பட்ட வரையில் அடித்துக் கொண்டு போனான். இதைக்கண்டுபிடிப்பதாவது, அதெல்லாம் முடியாதவேலை. வீண் ப்ரமை தானிது; இதற்காக நாயுடு மண்டையை உடைத்துக் கொள்ளலாம். ஆனால் ஜெயிப்பதுதான் துர்லபம்—என்று பேசிக் கொண்டே சாப்பிட்டு வெற்றிலை போட்டுக்கொண்டான்.

மணிவண்ணனுக்கோ மனம் பறக்கின்றது. கோபால நாம்கார் தெருவில் தாவுகின்றது. ரங்கநாதன் எப்போது எழுந்து

தொலைவான் என்று எண்ணுகிறான். ரங்கநாதனை சீக்கிரம் எழுந்திருக்கும் பேர்வழியாக வில்லை. அப்போதே மணி பத்தடிக்கும் சமயமாய்விட்டது. இன்னும் நேரங்கழிந்து விட்டால் வெயிலதிகரித்து விடுமே என்று எண்ணி உள்ளுக்குள் பயம் உதைக்கிறது. ரங்கநாதனை எவ்விதம் கிளப்பியனுப்புவது என்று அவன் யோசித்தான். ஒரு விதமான தீர்மானத்தைச் செய்துகொண்டு "அடே ரங்கநாதா! ஒரு க்ராமபோன் வாங்கவேண்டு மென்று நினைக்கிறேன். நீயும் கூடவா. ஷாப்புகளுக்குச் சென்று பார்த்து விட்டு வரலாம்" என்று தந்திரமாகக்கூறி அவனைக்கிளப்பிவிட்டான். உடனே அவனும் சம்மதித்து எழுந்திருந்தான். மஞ்சுளாவைக் கதவைத் தாளிட்டுக்கொள்ளும்படியாகக் கூறிவிட்டு வெளியே இருவரும் சென்றார்கள். மஞ்சுளா உண்மை யின்ன தென்றறியாது குழம்பியபடியே கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

வெளியே சென்ற இருவரும் நேரே பஸ்ஸில் ஏறிப் பட்டணம் போய் ஒப்புக்காக ஓர் க்ராமபோன் ஷாப்பில் நுழைந்தார்கள். அங்கு தகரார் பேரம் செய்துவிட்டுப் பிறகு பார்த்துக்கொள்வதாய் ரங்கநாதனை யனுப்பிவிட்டு அவன் நேரே வீடு செல்வதாக அவனிடம் சொல்லிக்கொண்டு நேரே கோபால நாம்கார் தெருவை நோக்கி நடக்கலானான். அப்போது அவன் "ஆகா! நாம் மனத்தை எத்தனை யடக்கியும் இந்தப் புது உணர்ச்சியும் மோகமும் என் உயிரைக் கொன்றுகொண்டே இருக்கின்றனவே! ஆகா! அப்படியே மஞ்சுளாவும் என்மீது சந்தேகங்கொண்டு சாவாள் போலும்! என்ன தடமாட்டம்! மஞ்சுளாவின் பரிபூர்ணமான பக்தி விச்வாசத்தையும் உண்மையாகக்கொண்டிருக்கும் நம்பிக்கையையும் கவனிப்பின் மனப்பூர்வமாக அவளை நம்பிக்கை த்ரோகம் செய்வதுபோலல்லவா ஆகிறது. ஆகா! என்ன செய்வேன்? என் மனத்தை இரு விதத்திலும் கட்டுப் படுத்த முடியவில்லையே! அந்த ரூப சுந்தரியின் எழிலோ மனத்தைத் துளைக்கின்றது. மஞ்சுளாவின் நினைவோ என்னையே பிளக்கின்றது. அவளைத் திருப்தி செய்வதனால் மனத்தை யடக்க முடியவில்லை. மனத்தைத் திருப்தி செய்

தாலோ என் மஞ்சுளாவுக்கு த்ரோகம் செய்ததாகின்றது. ஆகா! என்ன செய்வேன். என் காலக் கொடுமை போலும் இவையெல் லாம். என் மஞ்சுளாவிடம் நான் அந்தப் பெண்ணை நேசிப்பதாக நேரில் தெரிவித்தாலும் அவள் எனக்கு அனுகூலம் செய்வாளே. ஐயோ! கந்தர்வ ஸ்த்ரீபோலுள்ள அவளை விட வேறு ஒருத்தியை நான் இச்சிப்பதாக வெட்கத்தை விட்டு எவ்விதம் வெளிப்படை யாகக் கூறுவது? அதனால் என் கௌரவந்தான் எவ்விதம் மதிக்கப் படும்? சீச்சீ! இந்த எண்ணத்தை அடியோடு மறந்து விட்டு நாம் நேரே வீடு செல்வதே உசிதம்'' என்று எண்ணி நடுவழியிலேயே சற்றுத் தயங்கியவாறு திரும்புகிறான். பின்னும் அந்தப் பெண் ணைப் பார்க்காமல் செல்வதற்கு அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. அவனை அவன் கால் முன் பக்கமாகவே இழுக்கின்றதேயன்றி வீடு செல்லத் திரும்பவில்லை. ''சரி. ஈசன் விட்டவழி. அவள் சென்ற வீட்டையேனும் பார்த்துவிட்டுச் செல்லலாம்'' எனத் தீர்மானித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுக் கோபால நாம்கார் வீதியை நோக்கி விசையாக நடந்து அவ் வீதியை அடைந்தான். ஆகா! அவ் வீதியில் காலை வைக்கும்போதே தேகத்தில் ஒருவித உணர்ச்சி யுடன் புளகாங்கித மேற்பட்டது. மனத்தில் சொல்லவறியாத ஆநந்தமேற்பட்டு, ஜிலீர், ஜிலீர் என்று உடம்பில் குளிர்ச்சி யுண்டா கின்றது. அவன் அந்த மின்னாள் சென்ற வீட்டெதிரில் சென்று எதையோ கவனிப்பது போல் அவ் வீட்டை ஏற இறங்க ஒரு முறை பார்த்தான். வீதிக் கதவு திறந்திருப்பதுடன் ஒரு கிழவன் காவல் காப்போனாக உட்கார்ந்திருந்தான். அத்தருணம் அவ் வீட்டி னின்றும் ஒருவன் கையில் பிடில் பெட்டியுடன் இறங்கிச் சென்றான். அதைக் கண்ட மணிவண்ணன் ''அவளுக்குச் சங்கீதப் பயிற்சி யுண்டோ அல்லது வீட்டில் இன்னும் யாரேனும் கற்றுக்கொள்கி றார்களோ? என்ன இது! நடு வீதியிலும் வந்து மானங் கெட்டு நிற்கிறோமே! இந்த வீட்டில் சென்ற பெண்மணி என்ன ஜாதி யினளோ? விவாகமானவளோ அல்லவோ? அல்லது குலஸ்த்ரீயோ? இவைகளை யறியாமல் நாம் மனத்தைத் தளர விட்டு விடுவது மதி யீனத்திலும் மதியீன மல்லவா? சீச்சீ! என்ன புத்தி! என்ன புத்தி!'' என்று தனக்குள் பற்பல விதமாக் ஆலோசித்துக் குழம்பு

கிருன். இன்னது செய்வதென்று விளங்காமல் அங்கு மிங்கும் உலாவியபடியே இருக்கிருன்.

அப்போது அந்த வீட்டிலிருந்து அந்த மடமயில் வெளியே வந்து வீதிப் பக்கம் நின்று ஒரு விநாடி காட்சி கொடுத்து உள்ளே மறைந்தாள். ஆகா! இந்த அற்புதமான தேஜஸ் நிறைந்த வனிதையைக் கண்ட மணிவண்ணனின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையுண்டோ? தன்னை மீறிய ஆநந்த சித்தனுய் இமை கொட்டாது அவளையே உற்றுக் கவனித்துத் தேன் குடித்த நரியைப்போல் பல்லையும் பிளந்துகொண்டு நிற்கின்றுன்.

அந்த மின்னுள் வீதியில் வந்து இரு புறமும் ஒரு பார்வையால் சுழற்றிப் பார்த்துவிட்டுச் சரேலென உள்ளே போய்விட்டாள். ஆகா! அவள் உள்ளே சென்றதும் மணிவண்ணனுக்கு அவ்வீதியே இருண்டு விட்டதுபோலாயிற்று. அவன் இயம்ப இயலாத ஏமாற்றத்தை அடைந்தவன் போல மிகுந்த கலக்கத்துடன் அவ் வீட்டைப் பார்த்தபடியே நின்று விட்டான். "ஆகா! திடீரென்று காட்சி கொடுக்க வந்த கண்ணுள் கணப்பொழுதில் ஏன் மறைந்து விடவேண்டும்? ஆகா! நேற்று மாலை அளவற்ற அலங்காரத்தோடு காட்சி கொடுத்ததை விடச் சாதாரணமான நித்திய அலங்காரியாய்த் தற்போது வந்த அழகை என்னென்று கூறுவேன்! அடடா! இவளழகை வர்ணிக்கத் தொடங்கினுல் எந்த அங்கத்தை விடுவது, எதைக் கூறுவது.........என்ன இது! நாம் நடு வீதியிலா நிற்கிறோம்! ஐயோ! நம்மைக் கண்டு யாரேனும் பரிகஸிப்பதுடன் மஞ்சுளாவிடம் தெரிவித்து விடப்போகிருர்களே! ஹா! தர்ம சங்கடமே! சீச்சீ. நாம் உடனே வீடு செல்லவேண்டும்........ஆகா! மறுபடியும் இந்த மடமாதை எப்போது காணக்கிடைக்கும்?" என்று யோசித்து நின்றிருந்த தருணம் ஒரு மனிதன் மணிவண்ணனை நோக்கி "என்ன ஐயா! என்ன பார்க்கிறீர்கள்? தாங்கள் நிற்பதைப் பார்த்தால் எதையோ குறிப்பாகப் பார்ப்பதுபோல் தெரிகிறதே!" என்று கேட்டான்.

அவன் கேட்டதும் பதில் என்ன சொல்வதென் றுணராமல் சிறிது தயங்கியபின் தான் பதிலளியாதிருப்பது தவறு என்று

எண்ணிப் பேசத்தொடங்கி,"இந்த வீதியில் யாரோ வீடு விற்றுவிடுகிறார்களாம். வீடு வெகு நன்றாயிருக்கிறதென்று சிலர் தெரிவித்தார்கள். அதைத்தான் பார்க்கிறேன். எந்த வீடென்பது தெரியவில்லை. தங்களுக்குத் தெரிந்தால் கூறுங்கள்" என்று சமயோசிதமாயும் சந்தேகிக்க இடமில்லாமலும் கூறினான்.

இதைக் கேட்ட அந்த மனிதன் "இந்த வீதியிலா வீடு விற்கிறார்கள்! எந்த வீடோ எனக்குத் தெரியாது. விவரமறியாது வந்தீர்களே!" என்றான்.

**மணிவண்ணன்:**—விற்பனை வீடென்றால் வீதியில் சீட்டிருக்கும் என்று பார்த்தேன். காலி வீட்டின் சீட்டிருக்கிறதேயன்றி விற்பனைச்சீட்டு எதிலும் காணப்படவில்லை. அதற்குத்தான் ஒவ்வொரு வீடாகப் பார்த்துவருகிறேன். பெரிய மெத்தை வீடு என்று சொன்னார்கள். இதோ எதிரிலிருக்கும் இந்த வீடாக இருக்குமோ! என்று எண்ணுறேன்—என்று தந்திரமாகக் காட்டினான். அவ்விதம் கூறுவதில் தனக்குத் தகவல் ஏற்படும் என்பது அவனது நோக்கம்.

**அந்த மனிதன்:**—பேஷ். நன்றாக எண்ணுகிறீர்கள். அவர்கள் காதில் இந்த வார்த்தை விழுந்தால் உங்களை நசுக்கி விடுவார்கள்.

**மணிவண்ணன்:**—(இதுதான் தருணமென எண்ணியவனாய்) ஏனையா! எனக்குத் தெரியாது சொல்லிவிட்டேன். இவர்கள்பெரிய தனவந்தர்களோ!

**மனிதன்:**—பெரிய தனவந்தரே அவர்கள்.

**மணிவண்ணன்:**—ஓகோ! எனக்கு விவரம் தெரியாது; பாருங்கள். தெரிந்தால் கூறுவேனா! அவர்கள் என்ன ஜாதி?

**மனிதன்:**—அவர்கள் ஜாதியைக் கூறவேண்டுமா! வீட்டிற்குப் போவோர் வருவோரைப் பார்க்கும்போதே இன்ன ஜாதி என்று தெரியவில்லையா? தனவந்தர்களின் தனப்பெட்டியைக் காலியாக்கும் தாசிகள் இவர்கள். இவர்கள் காலத்திலேயே இத்தனை பெரிய வீட்டைக் கட்டிவிட்டார்கள். இதில் தாயும் மகளுந்தான் வாழ்கின்

ருர்கள். உம். அவர்கள் செய்தி நமக்கெதற்கு? நான் வருகிறேன்; நினைவிருக்கட்டும். என்னுடைய உத்யோகம் கடன் வாங்கிக்கொடுக்கும் (ப்ரோக்கர்) உபகாரசம்பந்தமானது. தாங்கள் நடுவழியில் நின்று யோசித்தபடியால் பணம் தேவையாக விருக்குமோ என்று கேட்டேன். அப்படி இல்லை என்று தெரிவதால் நான் வருகிறேன்—என்று நகர்ந்தான்.

**மணிவண்ணன்:**—தங்களுடைய நாமதேயம் யாது? தேவையானபோது பார்க்கிறேன். விலாசமும் தெரிந்தால் நலம்.

**மனிதன்:**—என் பெயர் அண்ணுமலை என்பார்கள். விலாசம் தங்கசாலைத்தெரு ........ நம்பர் வீடு; வருகிறேன்—என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

நமது மணிவண்ணனுக்கோ அளவு கடந்த ஆநந்த முண்டாய்விட்டது. தனது கோரிக்கை நிறைவேறிவிட்டதென்றே அவன் தீர்மானித்து விட்டான். "அடடா! அவர்களின் பெயரைக் கேட்க மறந்து விட்டோமே! என்ன முட்டாள்தனம்!" என்று சற்று யோசித்தான்........அச்சமயம் மணி பன்னிரண்டடித்ததாகக் குறிகாட்டும் குண்டுபோட்ட சத்தத்தைக் கேட்டதும் அவன் திடுக்கிட்டான். ஐயோ! மணி பன்னிரண்டு அடித்துவிட்டதே! இந்நேரம் நாம் வீதியிலா நின்ரும்? மனம் மாறிவிடுங்காலை மானமும் மாயமாய்மறைகின்றதே! ஐயோ! மஞ்சுளா என்ன எண்ணுகிருளோ! இதுகாறும் ரஜாக்காலங்களில் வீட்டை விட்டுக் கிளம்பாத நான் இன்று இத்தனை நேரம் வெளிச்சென்று வீடு சென்ருல் என்ன நினைப்பாளோ!" என்று பலவிதமாக எண்ணிய வண்ணம் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தன் வீட்டை நோக்கி நடந்தான். சரியாகப் பன்னிரண்டு மணி காலமாதலால் வெயில் தாங்கமுடியாதபடி காலைச்சுட்டு எரிக்கின்றது. அவனுக்கு அக்காலத்தில் சரியானபடி வண்டியும் கிடைக்காமையால் நடந்தே பகல் ஒருமணி சுமாருக்கு வீடு வந்து சேர்ந்தான்.

கணவன் வெளியில் சென்றதும் கதவைத் தாளிட்டுக்கொண்டு சென்ற மஞ்சுளா சமையல் வேலையைச் செய்துகொண்டே புத்த

கத்தை வாசித்தபடியே பதினேருமணிக்குள்ளாக தனது வேலையை யெல்லாம் செய்து முடித்துவிட்டாள்; இன்னும் தனது நாயகன் வரக்காணவில்லையே என்று வழிபார்த்த வண்ணமிருக்கிருள். கண்கள் பூத்தனவே யன்றி 12 மணியடித்தும் அவன் வரவில்லை. அந்தோ! இரவு கழிந்த சம்பவத்தை யெண்ணி அவள் மனக்குழப்பம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. "ஒருநாளும் அகாரணமாக இவ்விதம் வெளியில் செல்லாத மனிதர் சாக்குபோக்காகத் தமது நண்பனையும் அழைத்துக்கொண்டு வெளியேசென்றது மன்றி இன்னும் வரவில்லையே" என்று எதிர்பார்த்து வருந்தியிருந்த தருணம் மணிவண்ணன் வந்து சேர்ந்தான்.

ஆகா! தன் நாயகனைக் கண்டதும் மஞ்சுளா மட்டிலா மகிழ்ச்சியடைந்து தனது ஐயக்குறியை மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல் பரபரப்புடன் எதிரேசென்று வணங்கி, "ஆ! நாதா!இதென்ன புதிய பழக்கத்தைத் தொடங்குகிறீர்கள் போலும். ரஜா நாள் வந்தால் ஒருநாள் முற்றும் பேசியே நமது பொழுதைப் போக்குவோம்.அவ்விதமிருந்தும் நமக்கு நேரம் போதாதே! அவ்வாறிருக்க இன்று தாங்கள் இந்நேரம் முக்கியமான காரியம் யாது மில்லாதிருந்தும் சாப்பிடுவதையும் மறந்து எங்கு சென்றுவிட்டீர்கள்?" என்று வழக்கம்போலவே இளஞ்சிரிப்புடன் கேட்டாள்.

இது கேட்ட மணிவண்ணன் தனது செய்கையை எண்ணித் தானே வருந்தினன். எனினும் அதையும் அவன் மேலுக்குக் காட்டிக்கொள்ளாது பேசத்தொடங்கி "கண்ணே மஞ்சுளா! வரவர எனக்குப் புத்தி மழுங்குகின்றது. நேற்று வீட்டில் விட்டு வந்த சிநேகிதரைப் பார்க்கச் சென்றேன். அவர் சௌக்கியமடைந்து ஐந்தாறுபேருடன் சீட்டு ஆடிக்கொண்டிருந்தார். என்னையும் அதில் இழுத்துப்போட்டார்.எனக்கு இஷ்டமில்லாவிடினும் அவர்களுடைய பலவந்தத்திற்காக நான் உட்கார்ந்தேன். அந்தப் பிசாசு என்னை நன்ருய்ப் பிடித்துக்கொண்டு இழுத்துக்கொண்டே சென்றுவிட்டது. என்னை மீறிய இன்பத்துடன் ஆடுகையில் குண்டு போட்ட சத்தங் கேட்டு நான் எழுந்து வந்தேன். நீ கோபித்து கொள்வாயோ|என்று நினைத்தேதான் வந்தேன். உம். உம். இலையைப் போடு. கண்ணு!

நேற்றுப்போல் இருவரும் சாப்பிடலாம்'' என்று கூறியவாறு தனது சட்டையைக் களைந்து கைகால் சுத்தி செய்துகொண்டு உள்ளே சென்றான்.

இதற்குள் மஞ்சுளா இலையிட்டுப்பரிமாறத் தயாராகவிருந்தாள். மணிவண்ணன் இலையில் உட்கார்ந்ததும் மஞ்சுளா பரிமாறிவிட்டு வழக்கம் போல் நின்றாள். மணிவண்ணன் பேசுவதும் சாப்பிடுவதும் இவ்விடத்திலேயே யன்றி நினைவுமுற்றும் கோபால நாம்கார் தெருவில் கோவிந்தம் போடுகின்றது. அவன் முதலில் மஞ்சுளாவை உட்காரச் சொன்னானே யன்றிப் பின்னர் அவள் உட்கார்ந்தாளா இல்லையா யென்ற நினைவையே மறந்துவிட்டான். வழக்கத்திற்கு விரோதமாகச் சாப்பாட்டை ஐந்து நிமிஷத்தில் எவ்விதமான சம்பாஷணையு மின்றி முடித்துக் கொண்டு எழுந்து விட்டான்.

இவையெல்லாவற்றையும் பார்த்த மஞ்சுளாவிற்கு எதுவுமே தோன்றவில்லை. "ஒருநாளும் இவ்விதம் சாப்பிட்டதில்லையே! ஆபீஸ் நாளில் கூட நிதானமாகச் சாப்பிடுவதல்லவா வழக்கம். அவ்விதமிருக்க இன்று இவ்விதம் ஏதோநினைவாகச் சாப்பிட்டதே பெரிய சந்தேகமாக இருக்கின்றதே! என்ன காரணத்தினால் இவ்விதம் செய்திருக்கலாம்? இதை நாம் எவ்விதம் அறிவது?'' என்ற யோசனையிலேயே அவள் ஸ்தம்பித்து அபாரமான குழப்பத்துடன் நின்றுவிட்டாள். அவளுக்குச் சாப்பிடப்பிடிக்கவுமில்லை. அவள் வழக்கத்தை விடாது தன் கணவன் மிகுத்திய உச்சிஷ்டத்தைச் சிறிதளவு உட்கொண்டு எச்சில் சுத்தி செய்துவிட்டு, வெற்றிலை பாக்கு எடுத்துக்கொண்டு கணவனருகில் வந்து தாம்பூலமவனுக் களித்துவிட்டுத் தானும் போட்டுக்கொண்டு மெல்லப் பேசத்தொடங்கி, "சீட்டாடும் வழக்கம் தோன்றி, வீட்டிலுள்ள விளையாட்டையும் கொண்டாட்டத்தையும் திண்டாட்டத்தில் விட்டு விட்டது! உம். ஐயோ!பாவம், சீட்டு ஆட்டத்திலிருக்கும் இனிப்பு இன்று சாப்பாட்டில் இல்லாது போயிற்றுபோலும். முதலில் என்னைக் கூப்பிட்டுச் சாப்பிடச் சொல்லியதை மறுபடியும் செய்யச் சொல்வதற்குள் சீட்டு வந்து குறுக்கிட்டு மறதியை உண்டாக்கி விட்டதுபோலும்,

ஐயோ! நானொரு சீட்டுக்கட்டாகப் பிறந்திருந்தால் என்னைச் சதா எண்ணி யிருப்பீர்களல்லவா?'' என்று கொஞ்சலாகவும் வெகு அன்புடனும் கேட்டாள்.

இதைக் கேட்ட மணிவண்ணன் இன்னது சொல்வதென்பதை யறியாது சற்றுநேரம் மௌனம் சாதித்துப் பின்னர் பேசத் தொடங்கி, "என் கண்ணன மஞ்சுளாவைவிட இந்தப்பாழும் சீட்டா எனக்கு உயர்வு? என்னமோ தாக்ஷண்யம் சற்று ஆடினேன். இரவு கண்விழித்த அலுப்பினால் எனக்கு நித்திரைவருகின்றது. சற்றுத் தூங்கி எழுந்தால் மயக்கம் தீர்ந்துவிடும்'' என்று கூறியபடியே சாய்மான நாற்காலியில் (ஈஸிசேரில்) படுத்துவிட்டான். நித்திரை வருகிறதென்பதைப் பங்கம் செய்ய மனமற்ற மஞ்சுளா, வீதிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு தானும் ஒருபக்கம் சற்றுப்படுத்தாள்.

மணிவண்ணனுக்கு உண்மையாகவே நித்திரை வந்தது. அவன் நன்றாகத்துயின்று மாலை ஐந்து மணி சுமாருக்கு எழுந்து விழித்துக் கொண்டு "ஆகா! என்னமட்டித் தூக்கம் தூங்கிவிட்டேன்! இனி எவ்விதம் அங்குச் சென்று பார்க்கமுடியும்! நாளை ஆபீஸ் நாளாயிற்றே! பாழும் இடம் அருகிலேனுமுள்ளதா! தேனம்பேட்டை எங்கே! கோபால நாம்கார் தெருவெங்கே! மணி ஐந்து அடித்து விட்டதே! நாம் இனிச் சென்று வழியோடு திரும்பிவருவதற்குத்தான் நேரமிருக்கிறது........உம். இனி ப்ராப்தமில்லை'' என்று தனக்குள் நினைத்தவண்ணம் எழுந்து உட்கார்ந்தான்.

மஞ்சுளா காபி, பலகாரம் தயாராக வைத்திருப்பதை அவன் உண்டான். பின்னர் என்ன செய்வது, எங்குச்செல்வதென்று யோசித்தான். வீட்டிலேயே இருப்பதென்று தீர்மானித்துக்கொண்டு மஞ்சுளாவிடம் ஏதோ வழக்கம்போல் பேசிக்கொண்டும் பாடச்செய்து கேட்டும் பின்னர் உண்டு உறங்கினான். அன்று இரவு கழிந்தது. மறுநாள் உதயமாய்விட்டது. மணிவண்ணன் வழக்கம்போல் பத்து மணிக்குப் போஜனம் செய்து ஆபீஸுக்குச் சென்றான்.

அவனுக்கு அவன் மனம் அங்கு வேலைமீது செல்லாமல் மயங்குகிறது. தன் மனத்தில் புகுந்து கொண்டிருக்கும் அந்த உரு

வமே கண்ணெதிரில் நின்று உருக்குவதால் அவன் வேலையைச் செய்யமுடியாமல் தவிக்கிறுன். ஒரு சிறிய பிழையுமின்றி வேலே செய்யும் அவன் இன்று அடித்து அடித்து அநேக பிழைகளுடன் செய்து வைப்பதைப் பார்த்த அவனுக்கே நடுக்கமும் பயமும் தோன்றுகின்றன. "ஐயோ! இன்று இவ்விதம் தப்பிதம் ஏற்பட்டு வேலே யெல்லாம் பாழாகின்றனவே! என்ன செய்வேன்!" என்று தனக்குள் தானே எண்ணுகிறுன். மணி நான்கு அடித்தது; அவன் அப்பால் சற்று நேரங்கூட உட்கார மனமில்லாமல் எழுந்து எழுந்து நின்று பின் உட்காருகிறுன்.

அவன் பக்கத்திலிருக்கும் மற்ருெரு வேலேக்காரன் அவனுடைய நிலேமையைக் கண்டு "என்ன உடம்பு? ஒருவாருகவிருக்கின்ருயே!" என்ருன். இதுகேட்ட மணிவண்ணன், "ஆமாம். நேற்றுச் சாயங்கால முதல் தலேவலி; வேலேசெய்யவே முடியவில்லே. லீவு வாங்க மனமில்லாமல் மெல்ல வந்தேன். வந்தும் வேலேசெய்ய முடியவில்லே" என்ருன்.

இந்தக்கட்டுக்கதையைத்திட்டமென நம்பிய அம்மனிதன் "மணியும் நான்கு அடித்துவிட்டது, உங்களேப்பார்த்தால் பரிதாபமாகவிருக்கிறது. நீங்கள் எழுந்து சொல்லிக்கொண்டு வீடுசெல்வதே உசிதம்" என்ருன். இதுதான் தருணம் என்று எண்ணிய மணிவண்ணன் இன்னுங்கூட அபிநயம் செய்துகொண்டே எழுந்து சொல்லிக்கொண்டு ஆபீசைவிட்டுப் புறப்பட்டு நேரே கோபால நாம்கார் தெருவை நோக்கி நடக்கலாஞன். நாம் எந்த விதமான முகாந்திரத்தைக்கொண்டு அவள் வீட்டுக்குச் செல்வது?; திடீரென்று சென்ருல் நன்ருயிராது. ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டுச் சென்ருல்தான் சந்தேகிக்க இடமின்றி இருக்கும். இதற்கென்ன செய்யலாம்?" என்று யோசித்துக்கொண்டே நடந்து அவ்வீதியை அடைந்தான். அப்போதவனுக்குச் சடக்கென்று ஓர் யோசனே தோன்றியது. அதனுல் அவன் மிகவும் சந்தோஷமடைந்து அவ்வீட்டு வாயிலே அடைந்தான். அப்போது அவன் ஆநந்த வெள்ளத்தில் மிதப்பவன்போலாஞன். எனினும் மஞ்சுளாவின் நினேப்பாகிய காற்று, அவன் மனதில் திடீர் என்று வீசுகின்றது

அவன் அதைச் சட்டைசெய்யாது தடதடவென்று அவ்வீட்டின் படி ஏறி உள்ளே சென்றான்.

தாழ்வாரத்தில் தயாராக நின்றுகொண்டிருந்த காவலாளியொருவன் இவனைக்கண்டதும் வெகுநாளையப் பழக்கமுள்ளவன்போல் பேசத்தொடங்கி "ஆ! ஆ!! வாருங்கள்; வாருங்கள். மெத்தைக்குப் போங்கள்." என்று வழிகாட்டினான்.

மணிவண்ணன் அவன் காட்டிய வழியே சென்று மெத்தையை அடைந்தான். ஆகா! அந்த மெத்தையில் தோன்றிய அற்புதச் சிங்கார ஜோடிப்பைக்கண்டு ப்ரமித்துப் பத்து நிமிஷம் அவைகளைக் கண்கொட்டாமல் பார்த்தபடியே அவன் நின்றுவிட்டான். அதற்குள் அங்கு ஒரு கிழவி வந்து இவனெதிரில் நின்று, "ஐயா! என்ன இது! தாங்கள் நிற்கின்றீர்களே! தம்மைப்போலொத்த மகாராஜாக்கள் எம்முடைய வீட்டில் காலடிவைக்க நாங்கள் பாக்கியம் செய்ய வேண்டுமே! அப்படிக்கிருக்கத் தாங்கள் நிற்பது தகுமா! இப்படி உட்காருங்கள்" என்று உபசாரஞ் செய்தாள்.

மணிவண்ணன் அடங்காத ஆநந்தமடைந்து, வெகு காம்பீரமாய் அங்கு போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்தான். உடனே கிழவி சற்று உரத்த குரலில் "அம்மா! மைலா! (மைதிலி என்ற பெயர் செல்லத்தினால் மைலா வெனக் குறுகிவிட்டது; ஆகையினால் நாமும் இனி அவ்விதமே குறிப்போம்) தட்டில் தாம்பூலம் கொண்டு வா!" என்று கூவினாள். ஆகா! இவள் கூவியதைக்கேட்ட மணிவண்ணனுக்கு முன்னிலும் அதிகமான ஆனந்தமுண்டாய்விட்டது. இவன் தன் மனத்தை உருக்கிக்கொண்டிருக்கும் பாவை தக்ஷணத்தில் தன் எதிரில் வருவாள் என்றும் கண்குளிர்ந்தகாட்சித் தருவாள் என்றும் தனக்குள் எண்ணித் தேன்குடித்த நரிபோல் இன்பமநுபவித்துச்கொண்டிருக்கிறான்.

அத்தருணம் கந்தர்வமாதோ! ரதிதேவியோ! என்று ஐயுறும்படியான எந்தெழில் மடந்தை புஷ்பம் போன்ற தனதிருகரத்தில் ஒரு தங்கத் தாம்பாளத்தில் தாம்பூலத்தை ஏந்தியபடியே காண்போர் மனத்தைக் காந்தம்போலப் பற்றும் தன்மையுடைய புன்

முறுவல் பூத்த வதனத்துடனும் அன்னம்போன்ற நடையுடனும் எதிரிலிருந்த அறையினின்றும் வெளிப்பட்டு இங்கு தோன்றி அத்தட்டை மணிவண்ணன் அமர்ந்திருக்கும் சோபாவிற்கு அருகிலிருந்த சலவைக்கல் மேஜையின்மீது வைத்துவிட்டுச் சிட்டுக் குருவிபோல் நொடியில் முன்னிருந்த அறைக்குள் சென்று மறைந்துவிட்டாள்.

"ஆகா கா கா! என்ன ஜோதி! என்ன காம்பீரம்! என்ன ஒய்யாரம்! என்ன வனப்பு! என்ன நகைப்பு! என்ன சிங்காரம்! என்ன அற்புதம்! என்ன ஆநந்தம்! என்ன எழில்! என்ன வசீகரம்! அடாடா! பாழுங் கண்களுக்கு இன்றல்லவோ உற்சாகம். மஞ்சுளாவை மீறிய அழகே உலகத்திலில்லை என்று மவுட்டீகத்தனமாக எண்ணினேனே! இவளுடைய சிகையினெழிலுக்கு அவளுடைய முகத்தினெழில் நிகராகாதே! ஆகா! நடையழகைப் பார்ப்பதா! உடையழகைப் பார்ப்பதா! இடையழகைக் காண்பதா! மடமயிலின் மற்ற அவயவ அழகைக் காண்பதா!" என்று தனக்குள் எண்ணி அவள்மேல் வைத்த விழியை வாங்காமல் அப்படியே தம்பித்து நெக்கு விட்டுருகி உட்கார்ந்திருக்கும் தருணத்தில் அவளுடைய சேவை மறைந்துவிட்டது. பின் அவன் ஓர் அந்தகாரத்தில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிப்பவன் போலானான். "ஐயோ! வந்தவள் நம் எதிரிலேயே நின்று காட்சி கொடுத்துக்கொண்டிருக்கலாகாதா! ஏன் உள்ளே சென்று மறையவேண்டும்?" என்று தனக்குள்ளாகவே எண்ணித் தவிக்கின்றான்.

இது இங்ஙனமிருக்க மஞ்சுளா, வீட்டில் வழக்கமாக ஆறு மணிக்கு ஆபீஸிலிருந்துவந்து சேருகிற தன் கணவன் மணி 7, 8, 9, 10, அடித்தும் வாராமையினால் "ஆ! இதென்ன நேற்று முதல் எல்லாம் விநோதமாக நடக்கின்றனவே! என்ன காரணத்தினால் இன்னும் நம் ப்ராணகாந்தன் வந்து சேரவில்லை? ஐயோ! எனக்கு ஒருவழியும் தோன்றாமல் குழம்புகின்றது. என்னசெய்வேன்?" என்று துடித்தவண்ணம் வீதி ஜன்னலருகில் நின்று வழி பார்த்துக்கொண்டிருந்தாள்.

---

## 6-வது அதிகாரம்

### விதியின் பயனே! சதியாய் நேர்ந்தது!!

தாமோதரனுக்கு ஆஸ்பத்ரியில் செய்த சிகிச்சையால் தலையின் ரணம் சிறுகச்சிறுகக் குணமாய்விட்டது. பத்து தினத்தில் அவன் தானே தாராளமாய் எழுந்து உலாவும்படியான திடமடைந்து விட்டான். தன் காதலியின் வீட்டிலிருந்து தனக்கு யாதொரு தகவலுமே தெரிய வில்லையே யென்ற வேதனையினால் தனது வளர்ப்புத்தாயைக் கேட்டதில் "மரகத வல்லிக்கு உடம்பு சரியில்லை என்று மாமி மாமன் சென்றிருக்கிறார்கள்; இன்னும் வரவில்லை" என்று ருக்மிணி ஆஸ்பத்ரிக்கு வந்து சென்ற மறுதினம் தெரிந்து கொண்டதற்குப் பின்னர் பத்து தினமாயும் ஒன்றும் தெரியாததாலும் ஒருவரும் இங்கு வாராமையாலும் அவனுடைய மனக் கலக்கம் அதிகரிக்க வாரம்பித்தது. அவனுடைய வளர்ப்புத்தாய்க்கு ஜுரங்கண்டு படுத்துவிட்டபடியால் அவள் இங்கு வருவதற்குக் கூடாமற் போய்விட்டது. அதனால் இனிநாம் எவ்விதமாகச் செய்தியறிவதென்று கருதித் தவிக்கின்றான். அச்சமயம் அவன் ஆஸ்பத்ரியை விட்டு வீட்டுக்குப் போகலாமென வைத்தியர் கூறிவிட்டபடியால், அவன் உடனே தன் வீட்டுக்குப் போய்த் தன் வளர்ப்புத் தாயைப் பார்த்தான். அவள் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதையறிந்து தக்க வைத்தியரைக் கொண்டு ஔஷதம் கொடுப்பித்தான். மாமன் வீட்டுச் செய்தியாதாயினும் தெரியுமோ என வினவ அவள் ஒன்றும் தெரியாதென்று தெரிவித்தாள். அவனுடைய வளர்ப்புத் தந்தை கிராமத்திற்குச் சென்று ஒருவாரமாய்விட்டபடியால் அவன் செய்தியைத் தெரிந்துகொள்வதற்கே முடியவில்லை. சிலர் மரகதம் இறந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். சிலர் இறக்கவில்லை; உடம்பு அசௌக்கியம் அதிகமாகயிருக்கிறதென்கிறார்கள். இதன் உண்மை விளங்கப்பெறாத தாமோதரன் கலங்குகிறான். தான் சென்றுவிசாரிக்கவும் கூடாதநிலைமையிலிருக்கிறான். இவ்விதமே இரண்டு நாட்களாய் விட்டன. அவனுடைய சிநேகிதன் ரங்கோனில் இருப்பதாயும்

அவனுக்கு அங்கு வேலையிருப்பதாயும் முன்னே ராஜேஸ்வரியிடம் தெரிவித்தபடி வேலையை அடுத்த வாரத்தில் ஒப்புக்கொள்ளும்படி யாக அன்று தந்தி வந்திருப்பதாக அவன் தன்னுடைய வளர்ப் புத் தாயிடம் தெரிவித்து பிரயாணத்திற்கு உத்தரவு கேட்டான்.

வளர்த்த பாசத்தால் அவள் முதலில் சம்மதிக்கவில்லை என்றாலும் வயிற்றின் பிழைப்பை நோக்கிவிடையளித்தாள். அவன் தனது வளர்ப்புத் தந்தை சென்றிருக்கும் கிராமத்திற்குச் சென்று அவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு மீண்டும் சென்னை யை அடைந்தான்.

அப்பால் அவன் தன்னுடைய ஆருயிர்க்காதலியைகடைசிமுறை பார்த்துவிட்டுச்செல்லவேண்டுமென ஆவல்கொண்டான். ஆனால் அவ் விதம்செய்வற்கு அவனுக்குச்சந்தர்ப்பம் ஏற்படவேயில்லை. பங்களா வின் வீதியில் யாருமறியாது அவன் நின்று பார்த்தான்; அவள் தென் படாமையால் மனந்தவித்துத் திரும்பிப்போய்விட்டான். அன்று மறு தினமே அவன் கப்பலேறும் நாளாகையால் "இனி இவ்வாசையைக் கட்டோடு விட்டுத் தீரவேண்டும். அன்று கண்டபோதே கடைசித் தரமென்று கூறியது பலிதமாய்விட்டது. உம். இவ்வளவே நமது ப்ராப்தம்" என எண்ணிப் பிரயாணத்திற்குச் சித்தமாய்விட்டான். மறுநாள் அவனுக்கு ஓர் யோசனை தோன்றியதால் அவன் சரே லென்று எழுந்து வெளியில் சென்று போட்டோக்ராபர் வீட்டை யடைந்தான். ராஜேச்வரியை அவனே படமெடுத்ததனால் போட் டோ அவனிடமிருக்கலாமென்ற யோசனையுடன் அவனிடம் ராஜத் தின் படத்தைக் கேட்டான். கண்ணபிரான் வீட்டுமனிதனே இவன் என்று சந்தேகமறத் தெரிந்ததனால் போட்டோக்காரன் உடனே படத்தை எடுத்துக்கொடுத்தான். தாமோதரனும் மகிழ்ச்சியோடு படத்தைப் பெற்றுக்கொண்டு நேரே வீடு சென்று தனதறையி லமர்ந்து ஒரு பெரிய கடிதமெழுதி முடித்தான்; பின் அதைக் கையில் வைத்துக் கொண்டு, தன் வளர்ப்புத் தாய் தந்தைகளிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து வீடுவந்து பிரயாணத்துக்குச் சித்தமாகி தனது சாமான்களை முன்னதாக ஆள்வசமனுப்பிவிட்டுத் தான் மட்டும்

தனியாக்க் கண்ணபிரான் பங்களாவின் வாசல் வழியாய் நடந்து சென்று அவ்வீதியில் சற்றுத் தயங்கியபடியே நின்றான். ஆகா! அவனுடைய அப்போதைய நிலைமையை விவரிக்கவும் வேண்டுமா! கண்ணீர் தானாகவே பெருகுகின்றது. தன் காதலியைக் காணாமல் செல்வதற்கு மனம் வரவில்லை. அங்கு உள்ளே செல்வதற்கும் அச்சமாக விருக்கிறது.இவ்விதமே வீதியில் ஐந்து நிமிஷம் யோசித்துக்கொண்டு நின்றான். "ஆகா! நான் இன்று கடைசிமுறையாக என் கண்மணியைப் பார்க்காமல் சென்றால் இனிமேல் என்னுயுள் காலத்தில் என்றும் காண்பதற்கே பாக்கியமற்ற பாவியாய்விடுகிறேனே! என்ன செய்வேன்! உம். எவ்விதமான அவமானம் நேரிடினும் அது என் கண்மணியின் பொருட்டாகையால் எனக்கு அதனால் மனக்கிலேசமிராது. உள்ளே சென்று பார்த்துவிட்டே செல்கிறேன்" என்று தீர்மானித்துக்கொண்டு வீதி வாயிற் பக்கம் சென்று பணிமக்களை நோக்கி, "வீட்டில் ஐயா இருக்கிறாரா?" என்று கேட்டான்.

அதற்குப் பணியாள் "ஐயா இல்லை" என்று கூறினான். இதைக் கேட்டதும் அவன் மனம் திடுக்கிட்டது. "ஆகா! மாமா இல்லாத வேளையில் நாம் வந்தது தெரிந்தால் நம்மீது தவறான எண்ணங்கொள்வாரோ? ஐயோ! என்னசெய்வேன்? அவ்விதம் செய்வதில் ராஜத்திற்கே கெடுதி சம்பவிக்கும்.ஆகையால் நாம் இப்படியே திரும்புவது உசிதம்" என்று எண்ணினான். உடனே அவனைமீறிக் கட்டிலடங்காத துயரமேற்பட்டு விட்டது. அவன், தன்னைக் காவலாளி இன்னிலையில் பார்த்துவிடப் போகிறானே என்று எண்ணி அஞ்சினான். பின் தன்னைத் தேற்றிக்கொண்டு காவலாளியை நோக்கி "அப்பா! வேலா! நான் ஐயாவைப் பார்க்கும் பொருட்டு வந்தேன். அவரில்லாமையால் நான் இப்படியே செல்கிறேன். ஐயா வந்தால் நான் ஊருக்குப் போவதற்கு விடைகொண்டு நமஸ்காரம் செய்ய வந்ததாகச் சொல்வாயப்பா! அம்மாளிடமும் சின்னம்மாளிடமும் கூறிவிடு. நான் போய் வருகிறேன்" என்று பொங்கிய துயரத்துடன் மொழிந்தனன்.

இதுகேட்ட காவல்காரன், "ஏஞ்சாமி! அம்மாவைக் கூப்பிடட்டுமா?" என்ருன். வேண்டாமெனத் தாமோதரன் தடுத்துவிட்டுத் திரும்பினுன். அத்தருணம் அகஸ்மாத்தாக ராஜேஸ்வரி வீதிப்பக்கம் வந்தாளாகையால் தூரவிருந்து பார்க்கையிலேயே அங்கு நிற்பது தனது உயிர்க்காதலன் என்று தெரிந்துகொண்டு அவள் கரைகடந்த மனமகிழ்ச்சியடைந்து இடத்தையும் தன்னேயுமறந்து இன்பமும் துன்பமும் அடையப்பெற்றவளாய் வீதிப்பக்கம் நடைக்கு ஓடிவந்து, "ஆ! அத்தான்! உயிர் பிழைத்து வந்தீர்களா? புனர்ஜன்ம மெடுத்தீர்களா! கடவுள் கிருபைகூர்ந்து தமக்கு புத்துயிரளித்தாரா?" என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தபடியே தன்னிரு கரங்களேயும் கூப்பினுள்.

தான் சற்றும் எதிர்பாராவிதமாக ராஜேஸ்வரி இங்கு திடீரென்று வந்து கண் கொள்ளாத் தரிசனம் அளித்ததை நோக்கி அகமகிழ்ந்து கடவுளுக்கு வந்தனத்தைச் செய்து விட்டுத் தன்னிடம் தயாராக வைத்திருந்த கடிதத்தைக் காவல்கார னறியாதபடி அவளிடம் கொடுத்துவிட்டுக் கண்ணில் நீர் பெருகிய வண்ணம் எதுவுமே பேசாமல் நின்ருன். அங்கு வேலேக்காரனிருப்பதும்; தன் மாமா இல்லாதிருப்பதும் தான் அங்கு நின்று பேசத் தடையென்று கூறி, அவளுடன் பேசவாரம்பித்தால் பேச்சு வளர்ந்துவிடுவதுடன் தங்கள் சம்பாஷணையைக் காவலாளி உணர நேருமென்றும் பலவிதத்தில் யோசித்துக் கொண்டு மிகவும் பரிதாபகரமான பார்வையுடன் ராஜத்தை நோக்கிய படியே பெருமூச்செறிந்தான். சற்று இரண்டடி அருகில் சென்று "என் கண்ணே! இன்றே எனது பிரயாண நாள். இன்றே ரங்கோன் கப்பல் புறப்படுகின்றது. உனது நலனக் கோரிப் புறப்பட்டு விட்டேன். உன்னுடைய இன்பகரமான வாழ்வை இனிது நடத்த ஈசன் அருள் பாலிப்பாராக. நான் சென்று வருகிறேன்" என்று ராஜத்தின் பதிலே எதிர் பார்க்காமல் புலம்பிய படியே சடக்கென்று சென்றுவிட்டான்.

ராஜமும் தன் மனக்கவலேயை உள்ளடக்கியபடியே கண்ணீர் பெருக்கிய வண்ணம் உள்ளே போய்விட்டாள். தாமோதரன் நேரே தனது பிரயாணச் சீட்டுடன் துறைமுகத்தை யடைந்து கப்பலில் தனக்காக நியமிக்கப்பட்டிருந்த இடத்தில் அமர்ந்தான். பின்

னும் சிலமணி நேரத்திற்கெல்லாம் கப்பல் புறப்பட்டு விட்டது. அந்தோ! அப்பொழுது தாமோதரனின் துயரமும் புலம்பலும் இன்னு மதிகரித்துவிட்டன. சிறிய குழந்தையைப்போலத் தேம்பித் தேம்பி அழத்தொடங்கி விட்டான். "ஆகா! என் ராஜரத்தினமே! இவ்வூர் எல்லையைக் கடந்துவிட்டேன். என் கண்மணீ! ஐயோ! உன் முகத்தைப் பாராமற் புவியில் எவ்விதம் உயிர்வாழ்வேன்? ஆகா! சற்றுப் பார்த்து வந்தேன்; இதற்குள் என் மனம் தவிக்கின்றதே. அடியோடு இனி என்னுயுள் பரியந்தம் உனது முகாரவிந்ததரிசனத்திற்கு அபாக்யம் செய்துவிட்டேனே. என் இன்ப வடிவே! உன்னை எண்ணி ஏங்கித்தவிக்கவோ ஈசன் இவ்விதமான காதலை நமக்குள் ஓங்கி வளரவிட்டார்! ஆகா! என்ன கொடுமையான எண்ணத்தை ஈசன் என்மேல் காட்டிவிட்டார்; உன்னையடையும்படியான அதிர்ஷ்ட மில்லை எனினும் உன்னை அடிக்கடி காண்பதற்குக் கொடுத்துவைக்காத பாபியாகவா ஆய்விடவேண்டும்? என்ன செய்வேன் ராஜேச்வரி! தன்னந் தனியாக நான் பிரிந்தபின்னர் உன்னுடைய நினைவு அதிகரிக்கின்றதே. ஆகா! என் கண்ணே! நீயும் நானும் கேவலம் பாலியப்பருவமாயிருந்த காலத்தில் விளையாடியதும் பேசியதும் என் மனக்கண்ணெதிரில் அச்சிட்டதுபோலத் தோன்றுகின்றனவே. ராஜம்! உனது 3, 4 பிராயத்தில் என்னை அன்பாக, "அத்தான்! நீ இண்ட உச்சப்பலகேலே ஒக்காச்சிக்கோ; நானு ஆட்ரேன். பாத்துச் சொல்றேன்" என்று உனது முத்தான வாயால் அமுதம் போன்ற மழலையினல் கூறினது எனக்கு இப்போது இந்தக்கப்பல் ஆடுவது நினைப்பூட்டுகிறதே. என் ஆருயிர்க்கனியே! அப்பொழுது உன் தாயார் வேடிக்கையார்த்தமாக உன்னையும் என்னையும் சேர்த்து ஊஞ்சலில் உட்காரவைத்து

மன்னு புகழ்க் கௌசலைதன் மணி வயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னி நன்மாமதிள் புடைசூழ் கணபுரத்தேன் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ

(பெருமாள் திருமொழி)

என்று வெகு இனிமையாய்ப் பாடியது எனக்கு நினைவிற்கு வருகின்றதே! தற்போது கப்பலிலுள்ள மற்ற ஜனத்திரள்கள் இடும்

சத்தமும் கடலின் ஜோ என்ற ஓசையும் இப்போதும் தாலாட்டுப் பாடுவது போலவே தோன்றுகின்றனவே! ஐயோ! நாம் இவ்விதம் ராஜத்தைப் பிரிந்து வந்து விடுவோம் என்ற எண்ணம் எனக்குச் சொப்பனத்திலும் தோன்ற வில்லையே! தயாபரனின் அருளோ இது! ஹா! என் ராஜ மாணிக்கமே! இனி இவ்வுயிர் போவதற்குள் உனது சேவை இந்த ஜென்மத்தில் கிடைக்குமோ! எது இனிக் கிடைப்பதேது? ஆகா! என் இன்பச்சுடரே! நான் தற்போதடையும் துன்பத்தை நீயும் அடைந்துகொண்டிருப்பாய் என்பது நிச்சயம். அதனால் உன் மனம் என்ன பாடு படுகின்றதோ! எப்படித் தவிக்கின்றாயோ! கண்ணீர் விட்டுக் கலங்குகின்றாயோ! பாவியாகிய என்னை நொந்து கொள்வாயோ! ஆ! என் செய்வேன்?'' என்று கலங்குகின்றான். கண்ணீர் பெருகி ஓடுகின்றது. ஏதும் தோன்றாமல் அங்கும் இங்குமாக அவ்வறையிலேயே உலாவினான். மனம் சாமாதானப் படவில்லை. பலவேறு விஷயங்களால் ஏற்பட்ட துக்கங்கள் ஒன்று கூடி அவன் மனத்தைப் புண் படுத்துகின்றன; கோ என்று கதறி அலறி அழுதால் தீரும் போலான வேதனை செய்கின்றது. அவனிருக்கு மிடமோ பல ஜனங்களும் நிறைந்திருக்கும் கப்பல். அவன் மனவேதனையினால் புலம்புவதும் பேசுவதுமாயிருப்பதை யாரேனும் பார்த்து விடப் போகின்றார்களே என்ற அச்சமொருபுறம் அவனைப் பாதிக்கின்றது. இத்தனை துயரத்துடன் மெல்ல அவ்வறையை விட்டு வெளிக்கிளம்பி ஆழியைக் கண்டு சற்று நினைவைமாற்றிக்கொள்ளக் கைப்பிடிச் சுவர் போலமைத்துள்ள இடத்தில் வந்து நின்றான். அப்போது மணி எட்டிருக்கலாம். கரேலென்ற கருங்கடல் ஹோ! என்ற சத்தத்துடன் கொந்தளிக்கின்றது. இருள் பயங்கரமாய்ச் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. அப்போது வெளித் தோற்றத்தைப் பார்ப்பதற்கும் வெகு பயங்கரமாகவே இருக்கின்றது. இருந்தாலும் ஆழியின் அலைகளைவிட அபாரமாகக் கொந்தளித்துப் பொங்கும் அவனுடைய மனோ வேதனையினால், அவனுக்குப் பயமென்பதே சிறிதும் தோன்றவில்லை. ஆகையினால் அவன் உன்மத்தன்போல் பார்த்துக்கொண்டே நிற்கிறான். "ஆகா! நாம் எதற்காக இனிமேல் புவியிலிருக்கவேண்டும்? இந்தக் கருங்கடலில் குதித்து உயிரை விட்டுவிட்

டால் என்ன............ஐயோ!நம்முடைய கஷ்டநிவாரணத்தைப் பார்த்துக் கொள்கிறோமே! நம்முடைய காதலியின் சுகத்தையும் நமது வளர்ப்புத் தாய் தந்தையரின் ரணுனு சம்பந்தத்தை தீர்த்துக் கொள்வதையும் கவனிக்கவேண்டாமா! அந்தோ! நாமிறந்து விட்டதாகக் கேள்விப்பட்டால் என் கண்மணியும் இறந்து விடுவாளே! வீணே அவளுடைய உயிரை நாம் வாங்கும் பாபத்திலல்லவோ போய்ச் சேருவோம். நம்மை அதிக பாசத்துடன் ஆதரித்துப் பாலூட்டி வளர்த்தவர்களை விருத்தாப்பிய தசையிலும் கஷ்ட தசையிலும் காப்பாற்றாது விட்டு விடுவதோ நமக்கு அழகு. நாம் எப்பாடு பட்டேனும் அவர்களிடம் நன்றி யறிதலுட னிருந்து நமது ரணத்தைத் தீர்த்துக் கொண்டால்மட்டும் நமக்கு நன்மையேயன்றி இவ்விதம் துர்மரணமாக இறந்தால் பலவிதத்திலும் துன்பமல்லவா நேரும். "ஆகா! என்ன ஜென்ம மெடுத்தோம்?" என்று பலவிதமாக யோசித்து வெகுநேரம் அங்கு நின்றான். மீண்டும் உள்ளே வந்தான். அவனுக்கு நித்திரை பிடிக்கவில்லை. படுக்கையில் படுத்திருப்பதற்கும் முடியவில்லை; மூட்டைப் பூச்சி உபத்திரவம். ஆகையினால் அவன் தன்னறைக் கதவை தாளிட்டுக்கொண்டு தன் காதலியின் புகைப் படத்தை எடுத்துப் பார்த்து உன்மத்தன்போல் தோன்றிய வாறெல்லாம் பிதற்றியபடியே அதைக் கண்ணிலொத்திக் கொண்டு தனது முத்துமாலைகளை யணிவித்து அதை மார்போடணைத்துக்கொண்டான். "ஆகா! ஜகதீசா! உன் மாயாவிலாசந்தான் என்னே! அதனைக் கண்டறிய வல்லார் யாவருளர்? அழிந்து போகக் கூடியதும் அநித்யமானதுமாகிய உயிரே மற்றொரு உயிரை இச்சிப்பதென்றும் உண்மையான காதலென்றும் பிரியமென்றும் இவ்விதமான கர்மாவையெல்லாம் ஏன் உண்டாக்கினாய் என்னப்பனே! அவற்றை யுண்டாக்குவதும் பின் உபத்திரவப் படுத்துவதும் உனக்கு விளையாடலோ! என் கண்மணி எனக்குக் கிட்டவில்லை என்று நான் சிறிதும் கவலை கொள்ளவில்லை. என்னுடைய கண்மணியின் முகார விந்த தரிசனுநந்தமு மனுபவிக்க இடமில்லாமல் இப்படிப் பிரித்து விட்டாயே, அந்த துக்கமே என்னை வதை செய்கின்றது. உம். வதைத்தாலென்ன! சிதைத்தாலென்ன எனது விதியிது! என்னைப்பற்றி எனக்கு யோசனை இல்லை.

என் கண்ணுன கண்மணி மனங்கலங்காமல் பார்த்துக்கொள்வாய். என்னப்பனே! ஜகதீசா!

(ஆனந்தபைரவி)

1. அரும்பொனே மணியே யெனன்பே யெனன்பான
அறிவே யெனறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே யென்றேன்று பாடினேன்
ஆடினேன் ஆடிநாடி

விரும்பியே கூவினேன் உலறினே னலறினேன்
மெய் சிலிர்த்திருகை கூப்பி
விண்மாரியென வெனிரு கண்மாரிபெய்யவே
வேசற்ற யர்ந்தேனியான்

இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு ுனுவுமுனே
இடைவிட்டு நின்றதுண்டோ
என்று நீயன்றுநா னுன்னடிமையல்லவோ
யாதேனு மறியா வெறுந்

துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரோடு கூட்டுகண்டாய்
சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே.

(நாதநாமக் கிரியை)

2. இனியே தேனக்குனருள் வருமோவெனக் கருதி
யேங்குதே நெஞ்சமையோ
இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரேன்
றேண்ணவோ திடமில்லையே

அனியாயமாயிந்த உடலை நானென்றுவரும்
அந்தகற்காளாக்கவோ

வாடித்திரிந்து நான் கற்றதுங் கேட்டதும்
அவலமாய்ப் போதனன்றே
கனியேனும் வறியசெங் காயேனுமுதிர்சருகு
கந்த மூலங்களேனுங்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியேயிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரிபூரண வகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே!

தாயுமான சுவாமிகள்.

ஏ சங்கரா! கங்காதரா ! மங்கைப் பாகாளா! மாணிக்கவாசகருக்காக அச்வமாய் வந்த அரனே! சந்திர சேகரனே! தயாபரனே! பராபரனே!'' என்று இவன் மெய்மறந்து பாடித்துதிப்பதைக் கேட்ட அருகிலிருந்த சிலர் "ஆகா! என்ன அருமையான கீதம்! என்ன சாரீரம்! என்ன பக்தி! என்ன பாடல்?'' என்று கேட்டும் கூறியும் மகிழ்ந்வாறு தாமோதரனறையின் வாயில் படியண்டை வந்து கூடிவிட்டார்கள். தாமோதரன் பாடலை நிறுத்தியதும் இவர்களும் சென்றுவிட்டார்கள். தாமோதரன் பாடியும் துதித்தும் பலவித எண்ணங்களில் சிதறிக் கொந்தளிக்கும் மனத்தினனுய்த் தன்னை மறந்து அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்து விட்டான்.

ப்ரும்மாநந்தமான கனவு கண்டுகொண்டே மெய் மறந்து தூங்கி மறுநாள் காலைப் பத்து நாழிகை சுமாருக்குக் கண் விழித்தான். எழுந்து தனது காலைக்கடனை முடித்துக்கொண்டு ஸ்நானம் செய்து தன் கையிலிருக்கும் கடவுளின் படத்தை வைத்து மானஸீகமாகப் பூஜித்து,

(காம்போதி)

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த

ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானே
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யானுனக்கு
மகனலனே நீயெனக்கு வாய்த்ததந்தை யலையோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்கமாட்டேன்
கொடுத்தருள்நின் னருளொளியைக் கொடுத்தருளிப்பொழுதே.

—திருவருட்பா

(கல்யாணி)

ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி!
காரொளி வண்ணனே ! கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர்களைகணம்மா! அரங்கமா நகருளானே.

(திருமாலை)

என்று இப்படி தோத்திரம் செய்து பாடினான். இது கேட்ட சங்கீதபிரியர் இங்கு வந்து தாங்களும் வெகு ஆநந்தத்துடன் கேட்டு சந்தோஷித்து இன்னும் சில பாடல்களைப் பாடும்படியாகக் கூறிப்பாடச் செய்து கேட்டுத்தாமும் ஆநந்தித்தார்கள்.

இந்த சந்தோஷத்தில் தாமோதரன் தன் ஆகாரத்தையும் மறந்தான். பகற்பொழுது இனிமையாய்க் கழிந்து விட்டது. மாலைநேரம் நெருங்கியதும் தன் கைவசமிருந்த ஆகாரத்தைச் சிறிதளவு உட்கொண்டான். அங்கு வேறு யாருடனும் பேசாது தன்னறையிலேயே தன்பொழுதை யோட்டிக் கப்பல் பிரயாணத்தைக் கழித்தான். கப்பலும் துறைமுகத்தை அடைந்தது. தாமோதரனுக்கு உண்மையில் ரங்கோனில் சிநேகிதர்கள் யாருமில்லை. அவன் தானாக ஒரு கம்பெனிக்கு மனுவொன்று எழுதிப்போட்டான். தெய்

வானுகூலமாய் வேலை கிடைத்துவிட்டது. முன்பின்னறியாத புதிய ஊருக்குத் தன்னை யனுப்ப தன் வளர்ப்புப் பெற்றோர்கள் சம்மதிப்பார்களோ மாட்டார்களோ என்கிற முன்னெச்சரிக்கையினால் தனக்குச் சினேகிதன் இருக்கிறானென்று சொல்லியிருந்தான்; கப்பலை விட்டு இறங்கியதும் தனக்கு வேலை கிடைத்திருக்கும் ஆபீஸ் எங்கிருக்கின்றதென விசாரித்துக்கொண்டு சாமான்களை வண்டியில் ஏற்றி, ஆபீஸுக்கு அருகிலிருந்த ஓர் இந்தியன் ஓட்டலில் அறையொன்று வாடகைக்கு வாங்கிக்கொண்டு அதில் சாமானைப்போட்டுவிட்டு அவ்விடத்திலேயே தனது போஜனத்தை வைத்துக் கொண்டான்; அன்றே தனது வளர்ப்புப் பெற்றோர்களுக்குத் தான் க்ஷேமமாக வந்து சேர்ந்ததாகக் கடிதமெழுதி விட்டுத் தனது ஆபீஸில் சென்று வேலையை ஒப்புக்கொண்டான்.

ராஜேஸ்வரியின் பிரிவாற்றாத் துயரத்தினாலும், புதிய ஊரின் ஜலம் தேகத்திற்கு ஒத்துக் கொள்ளாமையினாலும், மன ஏக்கத்தினாலும் அவனுடைய தேகம் நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே வருகின்றது. தனது மனவேதனையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் தனது கடமையைச் சற்றும் தடையின்றி வெகு அக்கரையாகச் செய்துவருகிறான். இவனுடைய நல்ல மாதிரியையும், வேலைத்திறத்தையும், குணத்தின் போக்கையும் நாளடைவில் காணக்காண ஆபீஸில் உள்ள எல்லோருக்கும் இவனிடம் அபாரமான மதிப்பும் பிரியமும் தானாகவே உண்டாய் விட்டன. பெருமையுஞ் சிறுமையும் தான்தரவருமே என்பது வீணாகுமா? இவன் சாப்பிடும் ஓட்டலிற் கூடச்சாப்பிடும் இளவல் ஒருவன் சகலவிதத்திலும் நன்மார்க்கப் பழக்கமுள்ளவனாயும் சத்குணனாயும் காணப்பட்டான். அவனுக்கும் நமது தாமோதரனுக்கும் நாளடைவில் நேசம் உண்டாகத் தலைப் பட்டது. இருவரும் சிலமாதத்திற்குள் ஆப்த மித்திரர்களாய் விட்டார்கள். தாமோதரனுக்கு 200 ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் கிடைத்தது. அவன் தனது செலவிற்கு ஐம்பது ரூபாயைமட்டும் வைத்துக் கொண்டு மாதா மாதம் 150 ரூபாயைத் தனது வளர்ப்புப் பெற்றோருக்கு அனுப்பிக் கொண்டே வருகிறான். இவன் தமது அருகி

விருந்த நாட்களில் உண்டாயிருந்த பிரியத்தைவிடத் தம்மை விட்டுப்பிரிந்த பின்பு தங்களுக்குப் பணமனுப்புவதை எண்ணி கோமளவல்லியும் அவள் புருஷனும் தாமோதரனின் மீது அளவு கடந்த பிரியங் கொண்டனர். வார வாரம் ரங்கோன் கப்பல் போவதிலும் வருவதிலும் இவர்களுடைய கடிதம் தவறாமல் செல்லும். தாமோதரனைப் பார்க்கவேண்டு மென்றும் புகைப்பட மெடுத்து அனுப்பவேண்டுமென்றும் பெற்றோர் கடிதம் எழுதினார்கள். தாமோதரனும் அவ்விதமே தன்னைப் படமெடுத்து அனுப்பினான்.

தாமோதரன் தனது ஜீவனத்தை வெகு சங்கிரகமாகச் செய்து கொண்டு தன்னைக் காத்து ரக்ஷித்தவர்களுக்குப் பணத்தை அனுப்பி வருகிறான். அவன் எவ்விதமான வேலையைச் செய்தபோதிலும் ராஜேச்வரியின் நினைவை அவனால் மறக்கவே சாத்யமில்லாமற் போயிற்று. அதே எண்ணமாகக் காலத்தைக் கடத்துகின்றான். தினம் ராஜத்தினிடமிருந்து ஏதேனும் கடிதம் வருமோ என்று எதிர்பார்த்து ஏமாற்ற மடைந்து வருந்துவான். இவ்விதமே சில காலம் சென்றது.

இவன் இப்படியிருக்கையில், ஒருநாள் சினேகிதன் சந்திர சேகரன் என்பவன் 'எப்பொழுதும் இவன் முகத்தில் வருத்தமே கொண்டிருக்கின்றதே. இதன் காரணம் யாதோ! இதைக் கேட்டறிய வேண்டும்" என்று எண்ணியவனாய் இரவு போஜன முடித்து இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் தாமோதரனை "நோக்கி நண்பா! நான் உன்னிடம் பழக்கம் செய்த நாள் முதல் பார்க்கிறேன். உன்முகம் சதா எக்காரணம் பற்றியோ வருத்தமே கொண்டிருப்பதாகத் தெரிகின்றதே. இதை நான் பலசமயங்களில் கேட்க எண்ணியும் என்ன நினைப்பாயோ என்று சற்று அஞ்சினேன். நாமிருவரும் உயிர் நண்பர்களாக ஆய்விட்டோம். உனது வருத்தத்தை அறிந்து கொள்ளவும் முடியவில்லை. அதைக் கண்டால் என் மனதும் கலக்கமடைகின்றது.

நாம் ஒருவரோடொருவர் பழகினேமேயன்றி உன்னுடைய குடும்ப வரலாற்றை நான் இதுபரியந்தமும் அறியமாட்டேன். நீயும் உரைப்பவனுகக் காணவில்லை. உனது கவலைதான் யாது? என்னிடம் கூறலாகாதா? அவ்விதம் கூறுவதால் உனக்கு ஏதேனும் கேடுநேரு மென்றால் வேண்டாம். இல்லையேல் சற்றுக் கூறலாகாதா ! என்னால் ஏதேனும் காரியம் ஆகவேண்டியிருந்தால் நான் தயாராகச் செய்து உன் வருத்தத்தைப் போக்குகிறேன். என்னை உனது சொந்த உடன் பிறந்தவனுக எண்ணிக்கொள். என்னிடம் கூற மறுக்காதே. உனது துன்பந்தான் யாது?'' என்று வெகு உருக்கமாயும் அன்பொழுகவும் கேட்டான். இதைக்கேட்டதும் தாமோதரன் தான் என்ன விதமான பதிலளிப்பது என்பது தெரியாமல் தயங்கினுன். நமது துயரத்தைத் தீர்க்கக்கூடியவர் கடவுளொருவரே யன்றி மனிதராலாகக் கூடியதா! பிறரறிந்து கொள்ளக் கூடியதா ! அவ்வித மறிந்தாலும் பரிகசிப்பார்களே யன்றி அதனுல் அனுகூலம் யாது ? '' என்று பலவிதமாகத் தனக்குள் யோசித்தான். மெல்லப் பேசத் தொடங்கி ''அப்பா! சந்திரசேகரா! எனது இந்தஜென்மத்தில் இதுவரையில் நான் உன்னிடம் சிநேகம் செய்தது போல வேறு யாரிடமும் செய்தறியேன். அதென்னவோ உண்மையிலும் உண்மை. என்னுடைய துயரத்தை உன்னிடம் கூறுமல் ஒளிக்க வேண்டுமென்கிறதாக நீ எண்ணுதே ! என்னுடைய விசாரமானது பிறரறிந்து நீக்கக் கூடியதல்ல. எனது உயிருள்ளளவும் விசாரப்பட்டே இறக்கவேண்டுமென்று என் தலைவிதி போலவும். எனக்குள்ள வேதனையை விவரித்துச் சொல்வதற்கு சாத்யமானதன்று. அதைப் பிறர் கேட்பதும் சொல்வதும் கூடாத வேதனையப்பா ! இதனுல் நான் உன்னை வித்தியாசமாக எண்ணுவதாக நீ நினைக்காதே. உன்னிடத்தில் எனக்கு வித்தியாசமே கிடையாது. நான் இவ்விதம் கூறுவதால் நீ நம்பாமலிருக்கலாம். இது உலக

இயல்புதான். எனது ஜீவியத்தை ஒரே வார்த்தையால் கூறி விடுகிறேன்! அதை விஸ்தரிக்கும்படிக் கேட்காதே. உலகத்தில் அநாதைப் பரதேசி என்று கூறுவார்களே. அந்தப்பதம் முற்றும் எனக்கே பொருத்தமானதென்பது வரையில் என்னால் கூறமுடியும். மற்றவைகளைப்பற்றி நீ கேளாதே!'' என்றான்.

இதைக்கேட்டதும் சந்திரசேகரனுக்கு யாதுமேவிளங்கவில்லை. தாமோதரனின் முகம் மாறுபட்டதுடன் அவன் கண்களில் கண்ணீரும் உதிர்வதையும் நோக்க அவனை அதற்குமேல் கேட்கவும் இவன் மனம் எழவில்லை. அவனைப்பார்க்க இவனுக்கும் துக்கம் வந்து விட்டமையால் மேலே எதுவும் பேசாது வருந்தியபடியே தன்னறைக்கு எழுந்து போய் விட்டான்.

தனியாக உட்கார்ந்திருக்கும் தாமோதரன் பெருங்கவலையால் வருந்திப் பலவாறு புலம்பலானான். ''ஆகா! நமது பிறப்பின் உண்மையை அறியாமல் தவிக்கும் ஜன்மமும் உலகில் உண்டோ! ஐயோ! மனித ஜன்மம் எப்போது எடுத்தோமோ அப்போதே பெற்றோர் என்பவரும் இருக்கவேண்டும் அவர்களை யறிந்துகொள்ளாத என் பிறப்பும் ஒரு பிறப்பாமோ! அந்தோ! அதைத் தெரியாமலே அந்தப் பாக்யத்தை இழந்தோம். எனது கண்ணின் கருமணியாகிய ராஜத்தின் நேசத்தை அறிந்து தெரிந்துகொண்டோம். அது பழுத்துச் செழித்தபின் சிதைந்தது போலாய்விட்டதே! இந்தப் பாபத்தை என்னென்று கூறுவேன்! ஆகா! என் தெள்ளமுதே! இன்று சரியாக 100 நாட்களாய் விட்டன உன்னைக்கண்டு. இந்த நூறு நாட்களும் நூறுயுகமாகவல்லவா கழிந்தன? என் இன்னமுதே! உன்னிடமிருந்து ஒரு கடிதமாயினும் கிடைக்குமென எண்ணினேன். அதுவும் என் விதியே! உம். நீ நல்ல புத்திசாலி யாகையினால் எல்லாவற்றையும் உணர்ந்தே செய்வாய் என்பது எனது திண்ணமான நம்பிக்கை. உனது சௌகரியக்குறைவினாலேயே எனக்குநீகடித

மெழுதவில்லை என்பதை நானறிவேன். அதனால் உன்மீது வருத்தமில்லை. எனது மனமாறாட்டத்தில் உனது கடிதத்தையேனும் பார்க்க நேருமோ என்ற ஆவலினால் தவிக்கின்றேன். என் கண்ணே! கடித மெழுதாதிருப்பது உனக்கு நன்மையே. அதையும் என துள்ள மறியும்'' என்று பித்தன் போல் எண்ணியவாறு இரவைக் கடத்தினான்.

அப்பால் சிலதினங்களுக் கெல்லாம் தாமோதரனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதன் கையெழுத்துத் தனது மாமனின் கையெழுத்துப்போலத் தோன்றியது. உடனே அவனுக்கு எதுவும் தோன்றவில்லை. ஆனால் ஆவலாகக் கடிதத்தை உடைத்துப் படிக்கலானான். அந்தோ! படித்துமுடிக்குமுன்''ஆ! ஐயோ! இதுவும் என் தலைவிதியின் பயனோ! மறையஇடித்த இடி என்மண்டையில் விழ வேண்டுமோ! ஏஜகதீசா! என் கண்ணே ராஜம்! ராஜம்!!'' என்று மூர்ச்சையாய் அப்படியே விழுந்துவிட்டான்.

ஆவணக் காப்பக நூலகம்
182844
600 008

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியவை

## சண்பக விஜயம்

இந்த நாவல், "இது சிறந்த நாவல்" என்று நாவல் படிப்பதில் ஆர்வமுடையார் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத் தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. அல்லது கேட்டாலும் அப்படியே யிருக்கும். இது பாலவிநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில்எண்ணிப் புறக்கணிக்கத் தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

மேலும் இதில் கூறியதையே கூறிப் படிப்பவர் மனத்திற்கு அருவருப்பைத் தரும்படியான சந்தர்ப்பம் எங்கும் காணக்கிடைக்காது. எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். ஆதலால் இதில் ஒரு புத்தகம் ஒவ்வொருவருடைய கையிலும் பூஷணமாக விளங்க வேண்டியது இன்றியமையாததாகும். டிம்மி 40-பாரங்களும் அழகிய சித்திரப்படங்களும் கொண்டது. விலை ரூ. 1—12—0.

## வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத குணங்களின் உயர்ச்சி முதலியனவும் கதா நாயகி நாயகருடைய தெய்வீகக் காதலின் இலக்ஷணம், கீரைக்கார் காமாக்ஷியின் உயரிய குணங்கள், துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் ஜமீந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந்தான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச்செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகரமாக விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும் பிரமுகர்களினாலும் மதிக்கப்பெற்றது. அழகிய படங்களுடன் 540-பக்கங்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூபாய். 2—8—0.

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

# அமிர்தாஞ்சனம்



எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

விலை அணா பத்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

7. தம்புச்செட்டி வீதி, சென்னை.

Edited and Published by V. M. Parthasarathy Iyengar,

PRINTED AT THE 'NOBLE PRESS,' TRIPLICANE, MADRAS S. E.